நினைவேந்தலை
தடுக்க
முடியாது
பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்தது முல்லை நீதிமன்று
02பக்கம்

Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 65 சோபகிருது வருடம், புரட்டாசி மாதம் 03ஆம் திகதி புதன்கிழமை
(20.09.2023) ஹிஜ்ரி 1445, ரபிஉல் அவ்வல் - 04, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

‘தமிழன்’ பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும்




QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.
0777983308

# நினைவேந்தலுக்கு கொழும்பில் தடை!

## திலீபன் நினைவுகூரலை முடக்கின நீதிமன்றங்கள்

கொழும்பு, மருதானை, கோட்டை உள்ளிட்ட மேலும் சில பகுதிகளில் திலீபனை நினைவுகூரும் நிகழ்வுகளை நடத்துவதற்கு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை (19) தடை உத்தரவு பிறப்பித்தது.

மேலும், மருதானை பிரதேசத்தில் நினைவேந்தல்களை நடத்துவதற்கு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றமும் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கோட்டை மற்றும் மருதானை பொலிஸார் நீதிமன்றில் முன்வைத்த கோரிக்கைக்கமைவாக இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

''ஒடுக்கப்படும் தமிழ் மக்களோடு நிற்போம்'' என்ற கோஷத்துடன் கிறிஸ்தவ ஒத்துழைப்பு இயக்கத்தினால் நேற்று...

02 பக்கம்

# ரோல்ஸுக்குள் பிளாஸ்ரிக் முட்டை

## அளுத்கமவில் அதிர்ச்சி

அளுத்கம பகுதியில் உள்ள பிரபல உணவகம் ஒன்றில் கொள்வனவு செய்யப்பட்ட ரோல்ஸில் பிளாஸ்ரிக் அல்லது இறப்பருக்கு நிகரான முட்டை இருந்ததாக வாடிக்கையாளர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

02 பக்கம்



# 16 அடி ஆழ குழிக்குள் விழுந்த தந்தை, மகள்

## கொத்தட்டுவையில் சம்பவம்

பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த தந்தையும் மகளும் நேற்று (19) காலை கொத்தட்டுவை ஐ.டி.எச். நீர் வழங்கல் சபைக்கு அருகாமையில் நீர் தேங்கியிருந்த சுமார் 16 அடி ஆழமுள்ள குழியில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த தந்தையும் மகளும்...

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...



அதுசரி.. அங்கே ரோல்ஷுக்குள்ள பிளாஸ்ரிக் முட்டையாவது இருந்ததே...

# ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன இராணுவத் தளமாக முத்திரை குத்துவதா?



## கவலையடைவதாகத் தெரிவிக்கும் ரணில்

02பக்கம்

# அங்கவீனமானோர் வாக்களிக்க புதிய அடையாள அட்டை

## துறைசார் மேற்பார்வைக்குழுவில் பெப்ரல் அமைப்பு தெரிவிப்பு



அரச பொறிமுறையில் இடம்பெறும் முறைகேடுகளைத் தடுக்க அனைத்துத் துறைகளும் டிஜிட்டல் மயமாக்கப்பட வேண்டும் என வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறவேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு...

02 பக்கம்

# நிட்டம்புவயில் ஏ.ரி.எம். உடைக்கப்பட்டு கொள்ளை

நிட்டம்புவ நகரில் ஏ.ரி.எம். இயந்திரம் ஒன்று உடைக்கப்பட்டு பெருந்தொகையான பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. குறித்த ஏ.ரி.எம்.இயந்திரம் நேற்றுமுன்தினம் (18) இரவு உடைக்கப்பட்டு அதிலிருந்த 78 இலட்சத்து 51 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், அருகிலிருந்த சி.சி.ரி.வி. கெமரா காட்சிகளின் உதவியுடன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சபாநாயகரின் விசேட அறிவிப்பு



வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கு அமைய ஒதுக்கப்பட்டுள்ள ஒரு மணி நேரத்தை கடந்து ஒவ்வொரு நாளும் நேரம் எடுத்துக்கொள்ளப்படுவதால்....

02 பக்கம்

# இலங்கையில் அதிகரித்துள்ள இளவயது மாரடைப்பு மரணங்கள்



02பக்கம்




சனல் 4 தொலைக்காட்சியின் உயரதிகாரிகள் ஜெனீவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடருக்கு சென்றுள்ளனர்.

அங்கு மனித உரிமைகள் பேரவையின் முக்கியஸ்தர்களை சந்திக்கவுள்ள அவர்கள், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் குறித்து மேலும் பல முக்கிய ஆவணங்களை வெளியிடவுள்ளனராம்.

இதேவேளை, சுவிஸில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள இலங்கையின் முன்னாள் பாதுகாப்புத்துறை அதிகாரிகள், ஊடகர்கள் பலரும் இதில் இணைந்து கொள்ளவுள்ளனராம்.



# மீண்டும் பாடசாலை சென்ற யாழ். சிறுமி வைஷாலி

■ பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் கவனக்குறைவினால் தவறான சிகிச்சை வழங்கப்பட்டு தனது ஒரு கையை இழந்த சிறுமி வைஷாலி நேற்று(19) மீண்டும் பாடசாலைக்குச் சென்றுள்ளார்.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவியான சாண்டில்யன் வைஷாலி மீண்டும் தனது கற்றலைத் தொடர்வதற்காக பாடசாலைக்கு சமுகமளித்தபோது, பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், சக மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் சுகிர்தன் ஆகியோர் பூங்கொத்து வழங்கி அவரை வரவேற்றார்கள்.

வைஷாலி கற்றலைத் தொடர்வதற்கும் அவர் பாடசாலை சமூகத்துடன் மீண்டும் ஒன்றித்து வாழ்வதற்கான அனைத்துவிதமான ஊக்கத்தையும் வழங்குவதாக பாடசாலை சமூகத்தினர் உறுதியளித்தனர்.

# நாட்டின் சிஸ்டம் பிழை

## துப்பாக்கிச்சூட்டின் பின்னணி குறித்து உத்திக எம்.பி. சபையில் தகவல்

நாட்டில் தற்போதுள்ள முறைமை காரணமாகத்தான், தான் சுடப்பட்டதாக நம்புவதாக பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

தனது கார் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று (19) கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்,

“இந்தச் சம்பவத்தை யார் செய்தார்கள் என்பதை விட, தற்போதுள்ள முறைமையினால்தான் தாக்குதல் நடத்தப்பட்டது என்று நான் நினைக்கிறேன். இந்த முறை தவறு என்று நாம் அனைவரும் அறிவோம். இந்த முறை தவறு என்பது நம் நாட்டு மக்களுக்கும் தெரியும். நமது நாட்டின் சமூக அமைப்பு தவறு. அரசியலும் தவறு. அதனால்தான் நாடு இன்று இந்த நிலைக்கு வந்துள்ளது.

இரு தரப்பிலும் தவறுகள் உள்ளன.

02 பக்கம்



# குச்சவெளி பகுதியில் படகு கவிழ்ந்து இளைஞர் மரணம்

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை- குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செந்தூர் பகுதியில் படகு கவிழ்ந்ததில் இளைஞரொருவர் நேற்று (19) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

செந்தூர், மதுரங்குடா கலப்பு பகுதியில் மீன் பிடிப்பதற்காக இரு இளைஞர்கள் சென்ற போது படகு கவிழ்ந்ததில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் மீட்கப்பட்டுள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் குச்சவெளி மதுரங்குடா-செந்தூர் பகுதியைச் சேர்ந்த சுதேந்திரன் ஜனூஷன் (19வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் பொலிஸாரின் விசாரணையின் பின்னர் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக கொண்டு செல்லப்படவுள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# நடிகர் விஜய் ஆண்டனி மகள் மறைவு: திரைத்துறையினர் அஞ்சலி

சென்னை, ஆழ்வார்பேட்டையில் உள்ள நடிகர் விஜய் ஆண்டனியின் இல்லத்தில் வைக்கப்பட்டிருக்கும் மகள் மீராவின் பூதவுடலுக்கு திரைத்துறையினர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.



சென்னை, ஆழ்வார்பேட்டையில் அமைந்துள்ள நடிகர் விஜய் ஆண்டனியின் இல்லத்தில் அவரது மூத்த மகள் மீரா செவ்வாய்க்கிழமை தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

ஆழ்வார்பேட்டை டி.டி.கே. சாலை பகுதியில் பிரபல நடிகரும் இசையமைப்பாளருமான விஜய் ஆண்டனி குடும்பத்துடன் வசித்து வருகிறார். இவர் மகள் மீரா (16), சர்ச் பார்க் பள்ளியில் 12ஆம் வகுப்பு படித்து வந்தார். மீரா மன அழுத்தத்திலிருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் திங்கள் இரவு மீரா, தனது படுக்கையறைக்கு தூங்குவதற்கு சென்றார். செவ்வாய்க்கிழமை அதிகாலை தந்தை விஜய் ஆண்டனி, மகளைப் பார்க்க படுக்கையறைக்கு சென்றார்.

அப்போது அங்கு மீரா, தூக்கில் தொங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார். உடனே அவர் வீட்டில் இருந்த பணியாளர்கள் உதவியுடன் மீராவை மீட்டு, அருகே உள்ள தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார். அங்கு மருத்துவர்கள் மீராவை பரிசோதனை செய்தனர். இதில், மீரா ஏற்கனவே இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

முதல் கட்ட விசாரணையில் மீரா மன அழுத்தத்தில் இருந்திருப்பது உறுதி செய்யப்பட்டது. இதனால் அவர், மன அழுத்தத்தில் தற்கொலை செய்து கொண்டாரா அல்லது வேறு ஏதேனும் காரணம் உள்ளதா என விசாரணை நடத்தி வருகின்றனர்.

திரைப்பட நடிகர்கள், நடிகைகள் உள்ளிட்ட பலரும் மீராவின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தி விஜய் ஆண்டனிக்கு ஆறுதல் கூறினார்கள்.

விஜய் ஆண்டனி மகள் பயன்படுத்திய செல்போனையும் ஆய்வுக்குட்படுத்தியுள்ள பொலிஸார் அவர் படித்த பள்ளி ஆசிரியர்களிடமும் விசாரிக்க முடிவு செய்துள்ளனர். உயிரிழந்த சிறுமி பிரபல தனியார் பள்ளியில் 12ஆம் வகுப்பு படித்து வந்தார்.

கடந்த 6 மாதங்களுக்கு மேல் மனச்சோர்வுடன் காணப்பட்ட அவர் அதற்காக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்நிலையில் தான் பள்ளி விடுமுறை நாளான திங்கட்கிழமை தனது தோழிகளை சந்திக்க விஜய் ஆண்டனி மகள் வெளியே சென்றுள்ளார்.

அதன் பின் அவர் தற்கொலை செய்துகொண்டதாக கூறப்படுகிறது.



**திருகோணமலை சிவன் கோவிலடியில் முன்னெடுக்கப்பட்ட திலீபன் நினைவுகூரலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன் மற்றும் திருகோணமலை வாழ் மக்கள் ஒன்றிணைந்து சுடர் ஏற்றி உருவப்படத்துக்கு மரியாதை செலுத்தினர். (அப்துல்சலாம் யாசீம்)**

## ரோல்ஸுக்குள்...

குறித்த முறைப்பாடானது அளுத்கம சுகாதார பரிசோதகரிடம் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அளுத்கம, களுவாமோதர பிரதேசத்தில் வசிக்கும் ஒருவர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டாளர் மற்றொரு நபருடன் அளுத்கம பிரதேசத்தில் உள்ள உணவகத்துக்குச் சென்று 1230 ரூபாய்க்கு முட்டை ரோல்ஸ், பணிஸ் , மீன் ரோல்ஸ் போன்ற சிற்றுண்டிகளை வாங்கியுள்ளார்.

இதன்போதே கொள்முதல் செய்யப்பட்ட ரோல்ஸில் முட்டை போன்ற வெள்ளை நிற இறப்பர் போன்ற பொருள் இருந்துள்ளதாக தெரிவித்துள்ளார். அதனை தீயில் சுட்டு சோதனை இட்டபோது அது இறப்பர் மணத்துடன் குறுகியதாக சொல்லப்பட்டது.இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## அங்கவீனமானோர்...

சிவில் அமைப்புகள் மத்தியில் தெரிவித்தது.

அந்தக் குழு பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ராரச்சி தலைமையில் 15 ஆம் திகதி சிவில் அமைப்புகளுடன் கலந்துரையாடுவதற்கு கூடிய போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

அரச சேவையில் பொறுப்பேற்றல் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் அதனால் அரச சொத்துக்கள் பாரியளவு வீணாகுவதாக சிவில் அமைப்புப் பிரதிநிதிகள் குழுவில் தெரிவித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த குழுவின் உறுப்பினர்கள் குறிப்பிடுகையில், அரச பொறிமுறையில் இடம்பெறும் விடயங்களில் அரசியல்வாதிகள் நேரடியாக பொதுமக்களுக்கு வெளிப்படுகின்ற போதிலும் அரச அதிகாரிகள் இவ்வாறு வெளிப்படுவதில்லை எனக் குறிப்பிட்டனர்.

அத்துடன், தேர்தல் முறைமை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. அங்கவீனர்களுக்கு வசதியாக வாக்களிக்கும் வகையில் 10 மாவட்டங்களில் புதிய அடையாள அட்டை வழங்கும் முன்னோடி வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக பெப்ரல் அமைப்பின் பணிப்பாளர் தெரிவித்தார்.

அங்கவீன சமூகத்தினருக்கு தேவையான வசதிகளை செய்துகொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் இந்த அடையாள அட்டை வேலைத்திட்டத்தை முழு இலங்கையிலும் வழங்குவதன் இயலுமை தொடர்பில் கண்டறியுமாறும் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

மேலும், இலங்கையில் தற்பொழுது காணப்படும், ஆனால் நடைமுறையில் இல்லாத சட்டங்களை விரைவாக செயற்படுத்துவது அத்தியாவசியமானது என சிவில் அமைப்புக்களின் தலைவர்கள் இதன்போது குறிப்பிட்டனர்.

அரச சேவையில் பொறுப்பேற்றல் மற்றும் பொறுப்புக்கூறலை ஏற்படுத்துவதற்கு சிவில் அமைப்புகள் சில ஒன்றிணைந்து தயாரித்துள்ள பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை இதன்போது குழுவின் தலைவருக்கு கையளிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் குழுவின் உறுப்பினர்களான (ஜனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்க, மொஹமட் முஸம்மில், சஞ்சீவ எதிரிமான்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நினைவேந்தலுக்கு...

செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணிக்கு மருதானையில் அமைந்துள்ள சமய, சமூக நடுநிலையத்தில் திலீபன் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஏற்கனவே கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை நோக்கிப் பயணித்த திலீபனின் நினைவு ஊர்தி மீதும் அந்த ஊர்தியில் பயணித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மீதும் சர்தாபுர பகுதியில் வைத்து சிலரால் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கடும் கண்டனங்களுக்கு உள்ளாகியிருந்தன.

இவ்வாறானதொரு பின்னணியில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நினைவேந்தல் நிகழ்வைக் குழப்பும் வகையில் முதுகெலும்பு இருப்பவர்கள் ஆயத்தமாகுங்கள். கொழும்புக்கு வருகைதரும் புலிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்துவோம் என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதிவுகள் நேற்று முன்தினமும் நேற்று காலையிலும் பேஸ்புக், ட்விட்டர் உள்ளிட்ட சமூகவலைத்தளப்பக்கங்களில் அதிகளவில் பகிரப்பட்டன.

அதனையடுத்து திலீபன் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் காரணமாகவும் வன்முறைத்தாக்குதல்கள் மற்றும் அநாவசியமான குழப்பங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கிலும் நேற்று மாலை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த நினைவேந்தல் நிகழ்வை இரத்துச்செய்வதாக கிறிஸ்தவ ஒத்துழைப்பு இயக்கம் நேற்றுக் காலை அறிவித்தது.

இதுஇவ்வாறிருக்க பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை அடுத்து கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் மருதானை, கோட்டை உள்ளிட்ட மேலும் சில பகுதிகளில் திலீபனை நினைவுகூரும் நிகழ்வுகளை நடத்துவதற்குத் தடைவிதித்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

## இலங்கையில்...

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் மரண விசாரணை பிரிவினரால் கடந்த மூன்று மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட 1500 மரண விசாரணைகளில் 50 வயதுக்குட்பட்ட 100 பேர் மாரடைப்பு மற்றும் நீரிழிவு நோயினால் உயிரிழந்துள்ளது தெரிய வந்துள்ளதாக கொழும்பு மரண விசாரணை அதிகாரி இரேஷா சமரவீர தெரிவித்தார்.

50 முதல் 60 வயதுக்குட்பட்டவர்களுடன் தொடர்புடைய 200 இறப்புகள் மாரடைப்பு மற்றும் நீரிழிவு நோயால் ஏற்பட்டதாகவும் அவர் கூறினார்.

குறித்த காலப்பகுதியில் ஏற்பட்ட திடீர் மரணங்களில் மூன்றில் ஒரு பங்கு மாரடைப்பினால் ஏற்படுவதாகவும் மாரடைப்பினால் இளைஞர்கள் இறக்கும் போக்கு அதிகரித்து வருவதாகவும் அவர் கூறினார்.

இறந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களின் தகவல்களின்படி, இவர்களுள் பெரும்பாலானவர்கள் துரித உணவுகளுக்குப் பழகி வருவதாகவும் அவர்களுள் சிலர் வேலை மற்றும் கல்விக்காக வீட்டை விட்டு வெளியே இருப்பதாகவும் அவர் கூறினார்.

## நாட்டின்...

இதற்கான சரியான இடத்தை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். எங்கு மாற்றுவது என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். இரு தரப்பும் அதைக் கண்டறிந்து செயல்பட வேண்டும். அந்த மாற்றம் வரும் வரை இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியாது. அந்த அரசியல் மாற்றத்தை இந்த நாடு கோருகிறது. அந்த வித்தியாசத்தை மாற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம். அந்த மாற்றத்துக்காக நாங்கள் இளைஞர்களாக பணியாற்றி வருகிறோம் என்றார்

## 16 அடி ஆழ...

குழியில் தவறி விழுந்ததாகவும் பின்னர் தந்தை மகளை குழியில் இருந்து வெளியே கொண்டு வந்துள்ளதைத் தொடர்ந்து பிரதேசவாசிகள் அவர்கள் இருவரையும் காப்பாற்றியுள்ளனர்.

இதேவேளை, குடிநீர் குழாய் உடைந்ததன் காரணமாக இவ்வாறு பாரிய குழி ஏற்பட்டுள்ளதாகவும் அப்பகுதியில் நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நினைவேந்தலை...

தியாகி திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை நடத்த தடைவிதிக்குமாறு கோரி முல்லைத்தீவு பொலிஸார் சமர்ப்பித்த விண்ணப்பத்தை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. நேற்று இந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையங்களின் சார்பில் இதேவிதமான கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான உத்தரவு இன்னும் பிறப்பிக்கப்படவில்லை.

## சபாநாயகரின்...

பொது அலுவல்களுக்கு ஏற்படும் தடைகள் மற்றும் அதன் மூலம் விவாதத்துக்கான காலம் குறைவது தொடர்பில் செப்டெம்பர் 01 மற்றும் 08 ஆம் திகதிகளில் இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டங்களில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (19) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அதற்கமைய, வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தை திட்டவட்டமாக மு.ப. 10.30க்கு நிறைவு செய்வதற்கும் அதுவரையான நேரத்தில் கேட்க முடியாத வினாக்கள் இருந்தால், அவற்றை அடுத்து பட்டியலிடக்கூடிய அண்மித்த தினமொன்றில் கேட்பதற்கு இயலுமான வகையில் மீண்டும் ஒழுங்குப்பத்திரத்தில் சேர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் சபாநாயர் அறிவித்தார்.

அத்துடன், வினாக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தில், வேறேதும் விசேட விடயமொன்று தொடர்பில் குறிப்பிடுவதற்கு ஏதாவதொரு உறுப்பினர் கருதினால், நிலையியற் கட்டளைகளுக்கு அமைய செயற்படுமாறும் அது தொடர்பில் தேவைக்கமைய தனது முன்னனுமதியை பெற்றுக்கொள்ளுமாறும் சபாநாயகர் அறிவித்தார்.

"பெறுமதிசேர் வரி (திருத்தம்)" சட்டமூலம் தொடர்பில் மனு

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் "பெறுமதிசேர் வரி (திருத்தம்)" எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றின் பிரதி தனக்குக் கிடைத்துள்ளதாக சபாநாயகர் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ள மேலதிக உறுப்பினர்கள்

"சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்)" சட்டமூலத்தின் பரிசீலனை செய்வதற்கு

"சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்)" எனும் சட்டமூலத்தின் பரிசீலனைக்கென 113 (2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவில் சேவையாற்றும் பொருட்டு மேலதிக உறுப்பினர்களை நியமித்துள்ளதாக சபாநாயர் அறிவித்தார்.

அதற்கமைய, ரோஹண திஸாநாயக்க, அ. அரவிந்த் குமார், அசோக அபேசிங்ஹ, கிங்ஸ் நெல்சன், ரோஹண பண்டார, நிபுண ரணவக்க, ராஜிகா விக்கிரமசிங்ஹ மற்றும் லலித் வர்ண குமார ஆகியோர் அந்தக் குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

"ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்)" சட்டமூலத்தின் பரிசீலனை செய்வதற்கு

"ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்)" எனும் சட்டமூலத்தின் பரிசீலனைக்கென 113 (2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவில் சேவையாற்றும் பொருட்டு மேலதிக உறுப்பினர்களை சபாநாயகர் நியமித்துள்ளார்.

அதற்கமைய, விதுர விக்ரமநாயக, விஜித பேருகொட, கீதா சமன்மலீ குமாரசிங்க, அசோக அபேசிங்ஹ, கிங்ஸ் நெல்சன், ரோஹண பண்டார, உபுல் மஹேந்திர ராஜபக்ஷ மற்றும் மஞ்சுலா திசாநாயக்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்கு முன்னரும் பின்னரும் புலனாய்வு பிரிவினர் செயற்பட்ட விதம் குறித்து சந்தேகங்கள் உள்ளன - சி.ஐ.டி யின் முன்னாள் தலைவர் பரபரப்பு தகவல்



உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்கு முன்னரும் பின்னரும் புலனாய்வுப் பிரிவினர் செயற்பட்ட விதம் சந்தேகத்துக்கிடமானதாக காணப்பட்டதாக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்ற வேளை சிஐடிக்கு பொறுப்பாகவிருந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவிசெனவிரத்ன தெரிவித்துள்ளார்.

டிஎன்எல் தொலைக்காட்சிக்கு திங்கட்கிழமை இரவு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

புலனாய்வு அமைப்புகள் மற்றும் புலனாய்வு முகவர்களின் நடவடிக்கைகள் குறித்து பல கேள்விகள் உள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்கு தலைமை வகித்த சஹ்ரான் ஹாஷிமை கட்டுப்படுத்திய மற்றுமொரு நபர் காணப்பட்டார்.அந்த நபர் மிகவும் புத்திசாலி. இலங்கையில் முதலாவது ஒருங்கிணைக்கப்பட்ட தாக்குதலை ஒருங்கிணைக்கும் திறன் அவரிடம் காணப்பட்டது.விடுதலைப் புலிகள் கூட அதனை செய்யவில்லை என செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

சஹ்ரான் ஹாஷிம் முறையான கல்வியறிவற்ற ஒருவர். அவருக்கு அவ்வாறான ஒருங்கிணைந்த தாக்குதலை மேற்கொள்வதற்கான திறமையிருந்திருக்காது எனவும் குறிப்பிட்டுள்ளார்.அவருக்கு மேல் யாரோ இருந்தார்கள். மிகவும் திறமையும் பயிற்சியும் அனுபவமும் மிக்க ஒருவர் அவரிடம் ஒருங்கிணைந்த தாக்குதலுக்கு பலரை ஒருங்கிணைக்கும் திறன் இருந்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரச மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர்களுக்கு சஹ்ரான் ஹாஷிமை தெரிந்திருந்தது.அவர்கள் அவருடன் இணைந்தும் செயற்பட்டுள்ளனர்.தாக்குதலுக்கு முன்னரும் தாக்குதலின் போதும் அதன் பின்னரும் அவர்கள் இணைந்து பணியாற்றியுள்ளனர் எனவும் சிஐடியின் முன்னாள் தலைமை அதிகாரி பேட்டியில் தெரிவித்துள்ளார்.வவுணதீவில் இரண்டு பொலிஸார் கொல்லப்பட்டமைக்கு முன்னாள் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களே காரணம் என்ற கருத்தை உருவாக்குவதற்கு புலனாய்வுப் பிரிவினர் கடுமையாக முயற்சித்தனர். அவர்கள் சில ஆதாரங்களை திட்டமிட்டு உருவாக்கினார்கள். இது குறித்து சிஐடிக்கு பெரும் சந்தேகம் காணப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்கும் ஐஎஸ் அமைப்புக்கும் தொடர்புள்ளதா என கண்டறிவதற்கான விசாரணைகளை தேசிய புலனாய்வுப் பிரிவின் இன்ஸ்பெக்டர் பண்டார முன்னெடுத்தார்.எனினும் இந்த விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டன.ஐஎஸ் அமைப்பிடமிருந்து சஹ்ரானுக்கு உதவிகள் கிடைத்தன என்பதற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை.தேசிய புலனாய்வுப் பிரிவின் தற்போதைய தலைவர் சுரேஸ் சாலேக்கும் சிஐடியினருக்கும் சுமுகமான உறவு காணப்படவில்லை.சனல் 4 இன் குற்றச்சாட்டு குறித்து விசாரணைகள் இடம்பெறவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஹம்பாந்தோட்டை ...

இந்து -பசுபிக் பிராந்தியத்தில் பெரும் வல்லரசுப் போட்டி நிலவியபோதிலும் இந்து சமுத்திரம் மற்றும் தென் பசுபிக் சமுத்திர தீவு நாடுகளின் சுதந்திரம், அவற்றின் உள்ளக விவகாரங்களில் தலையிடாமை மற்றும் அவர்களின் தனிப்பட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பிராந்தியத்தின் அனைத்து நாடுகளும் அர்ப்பணிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடருடன் இணைந்ததாக நியூயோர்க் நகரில் நேற்றுமுன்தினம் (18) இடம்பெற்ற கடல்சார் நாடுகளுக்கான 3 ஆவது இந்து - பசுபிக் தீவு நாடுகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

கார்னகி எண்டோவ்மென்ட் (Carnegie Endowment) மற்றும் சசகாவா மன்றம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதான உரை நிகழ்த்தியதோடு, சர்வதேச அமைதிக்கான கார்னகி எண்டோவ்மென்ட் இன் கொள்கை ஆராய்ச்சி தொடர்பான சிரேஷ்ட உப தலைவர் டென் பெயரினால் (Dan Baer) இது நெறிப்படுத்தப்பட்டது.

பிரதான உலக வல்லரசுகளுக்கு இடையிலான போட்டியில் தலையிடுவதற்கு இந்து சமுத்திர மற்றும் தென் பசுபிக் பிராந்தியத்தின் தீவு நாடுகள் விரும்பவில்லை என்றும் இந்த நாடுகள் தமது சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடு உட்பட அவர்களின் முதன்மையான விடயங்களில் கவனம் செலுத்தி, தமது நாடுகளின் இறைமை மற்றும் சுதந்திரத்தைப் பேண முயற்சிப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மேலும், இலங்கை அரசாங்கம் இந்தியாவுடனோ அல்லது சீனாவுடனோ கூட்டணி அமைக்காது என்றும் எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையின் நலன்களை முன்னிலைப்படுத்தி நிற்கும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அதேபோன்று, பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளும் தமது நாடுகளின் இறைமைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா உள்ளடக்கிய க்வொட் (Quad) நாடுகள் மற்றும் சீனாவின் இலக்குகளுடன் தொடர்பில்லாத இந்து சமுத்திரத்தின் மற்றும் தென் பசுபிக் பிராந்தியத்தின் தீவு நாடுகள் தமது சொந்த முன்னுரிமைகளைக் கொண்டிருப்பதாகவும்

அவற்றை மதிக்கத் தயாராக இருக்கும் எந்தவொரு தரப்பினருடனும் ஒத்துழைப்பைக் கட்டியெழுப்ப இலங்கையும் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். சீனாவின் எழுச்சியானது APEC மற்றும் ASEAN போன்ற பிராந்திய கட்டமைப்புக்குள்ளேயே நடந்ததாகவும் அதனை பல நாடுகள் ஏற்றுக்கொள்வதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

அண்மைக் காலமாக இந்தக் கட்டமைப்புக்கு அப்பால் மாபெரும் வல்லரசுப் போட்டி விரிவடைந்து வருவதால் உறுப்பு நாடுகள் மத்தியில் கவலை தோன்றியுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

தெற்கு பசுபிக் சமுத்திரம் மற்றும் இந்து சமுத்திரம் ஆகியவை, பெரும் மூலோபாய மதிப்பைக் கொண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தெற்கு பசுபிக் பிராந்தியம் அமெரிக்க கடற்படைக்கு இன்றியமையாத கேந்திர மையமாகும் என்றும் இரண்டாம் உலகப் போர் காலத்தின் போது இந்து சமுத்திரம் முக்கிய பங்காற்றியது என்றும் தெரிவித்தார்.

பவளக் கடல் (The Coral Sea) மற்றும் மிட்வே போரின் போதும் இரண்டாம் உலகப் போரின் போதும் அமெரிக்கா தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தியதும் மற்றும் அட்மிரல் யமமோட்டோவின் விமானத்தை சுட்டு வீழ்த்தியதும் ஹவாய் உட்பட இந்த தென் பசுபிக் பிராந்தியத்தில் தான் என்பதை ஜனாதிபதி நினைவு கூர்ந்தார்.இந்து சமுத்திரத்தில் இலங்கையின் முக்கியத்துவத்தை இதன்போது விளக்குவதற்காக, வின்ஸ்டன் சர்ச்சிலின் அறிக்கையை மேற்கோள் காட்டிய ஜனாதிபதி, "இலங்கையை கைப்பற்றுவது என்பது இந்து சமுத்திரத்தில் அதிகாரத்தை இழப்பதாகும்" என்றும் குறிப்பிட்டார்.

இந்து-பசுபிக் பிராந்தியத்தின் முக்கியத்துவம், குறிப்பாக சீனாவின் சவால்களால் எடுத்துக்காட்டப்படுவதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இது பிராந்திய இயக்கம் மற்றும் ஒத்துழைப்பை மீள் மதிப்பீடு செய்ய தூண்டியுள்ளது என்றும் தெரிவித்தார்.

ஐரோப்பிய சக்திகள் மற்றும் நேட்டோவை தொடர்புபடுத்துவதற்காக G7 குழு எடுக்கும் முயற்சிக்கு எதிர்ப்பு எழுந்ததுடன், பிரான்ஸ் மட்டுமே அதற்கு ஆதரவளித்தது என்றும் இந்த சம்பவம் இந்து சமுத்திர ரிம் சங்கத்தின் (IORA) விதிகளை மீறுவதாகக் கருதப்படுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்து சமுத்திரத்தின் மேற்பரப்புப் போர் அச்சுறுத்தல்களைக் குறைக்கும் வகையில் நீர்மூழ்கிக் கப்பல் போர் அச்சுறுத்தல்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு இந்து சமுத்திர ரிம் சங்கத்துக்குள் (IORA) தீர்வு காணப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.தீவு நாடுகள் தொடர்பான பாதுகாப்பு உரையாடல்களை ஏற்றுக்கொள்ள முடியும் என்றாலும் அந்த நாடுகளின் உள்ளக விவகாரங்களில் தலையிடுவது பொருத்தமானதல்ல என ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை உட்பட பல தீவு நாடுகள் இந்து-பசுபிக் பிராந்தியம் தொடர்பில் உயர்மட்ட கலந்துரையாடல்களில் ஈடுபடவில்லை என குறிப்பிட்ட ஜனாதிபதி, அமெரிக்கா மாலைதீவில் தூதரகமொன்றைத் திறப்பது போன்ற அண்மைக் கால முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.ஆசியான் அமைப்பின் தலையீடு, ரஷ்ய-உக்ரைன் போர் மற்றும் BRICS+ உருவாக்கம் ஆகியவற்றின் காரணமாக இந்து சமுத்திரத்தில் அதிகார சமநிலை உருவாகி வருவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இந்த மாறும் பூகோள நோக்கு, தீவு நாடுகளின் சுதந்திரத்தைப் பேணுவதற்கு ஆதரவளிப்பதுடன், மேலும் இந்து சமுத்திர ரிம் சங்கம் (IORA), ஆசியான் (ASEAN) மற்றும் BRICS+ ஆகிய அமைப்புகளுக்கு இடையே வலுவான ஒத்துழைப்பைப் பேண வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இங்கு, ஹம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஹம்பாந்தோட்டை வர்த்தகத் துறைமுகத்தை சீன இராணுவத் தளமாக முத்திரை குத்துவது தொடர்பில் இலங்கை கவலையடைவதாகத் தெரிவித்தார். இந்தியாவுடன் இணைந்து திருகோணமலைத் துறைமுகத்தை இலங்கை அபிவிருத்தி செய்து வருவதாகவும் சர்வதேச அரங்கில் இந்த விடயத்தை முன்வைக்க விரும்புவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்திய மற்றும் பசுபிக் சமுத்திரங்களுக்கு இடையேயான தொடர்பை இனங்கண்டு, இரு பிராந்தியங்களின் சிறிய தீவு நாடுகளுக்கிடையில் செயலூக்கமான ஒத்துழைப்பை வலியுறுத்திய ஜனாதிபதி, இந்து-பசுபிக் கருத்தியலுக்கு இந்து சமுத்திர ரிம் சங்கம் (IORA), இன் தேவை அதிகளவில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்து-பசுபிக் பிராந்தியத்தில் பெரும் வல்லரசுப் போட்டி நிலவிய போதிலும் இந்து சமுத்திரம் மற்றும் தென் பசுபிக் பிராந்தியத்தில் தீவு நாடுகளின் சுதந்திரம், அவற்றின் உள்ளக விவகாரங்களில் தலையிடாமை, அவர்களின் தனிப்பட்ட முன்னுரிமைகளின் பாதுகாப்பதற்காக பிராந்தியத்தின் அனைத்து நாடுகளும் அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

# நிதி நகரமாக மாறும் கொழும்பு துறைமுக நகர்



## டுபாய், அபுதாபி ஆகிய நாடுகளில் முதலீட்டுக்காக அறிமுகம்



கொழும்பு துறைமுக நகரத்தை டுபாய் மற்றும் அபுதாபி ஆகிய நாடுகளில் எதிர்வரும் 26ஆம் திகதி உத்தியோகபூர்வமாக முதலீட்டுக்காக அறிமுகப்படுத்தவுள்ளதாக முதலீட்டு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம பாராளுமன்றத்தில் நேற்று (19) தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் டேவிட் கெமரனும் அந்த நிகழ்வில் கலந்துகொள்வார். துறைமுக நகரில் முதலீடு செய்வதற்கு இதுவரையில் 17 முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர்.

அதன்போது கொழும்பு துறைமுக நகரின் பெயரை கொழும்பு நிதி நகரம் (Colombo Financial City) என்று மாற்றுவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன.

புதிய விதிமுறைகளுக்கு அனுமதி கிடைத்ததன் பின்னர் துறைமுக நகர வேலைத்திட்டங்களில் பாரிய மாற்றம் ஏற்படும். அத்துடன் தொடர்ந்து முதலீட்டாளர்களின் நடவடிக்கைகளை ஆரம்பிக்க கூடியதாக இருக்குமென்று அவர் குறிப்பிட்டார்.

# நாளாந்தம் 300 வரையிலான இளைஞர்கள் நாட்டிலிருந்து வெளியேறுகிறார்கள்

## இது பாரதூரமான நெருக்கடியை ஏற்படுத்துமென்று டலஸ் எம்.பி. எச்சரிக்கை

நாட்டில் நாளொன்றுக்கு 300 வரையிலான இளைஞர், யுவதிகள் நாட்டை விட்டு வெளியேறுவதாகவும் இதனால், எமது சந்ததியினரின் எதிர்காலமே பெரிதும் பாதிக்கப்படும் என்றும் சுதந்திர மக்கள் சபையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டலஸ் அலகப்பெரும தெரிவித்தார்.

கட்டுகம்பல பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

செய்த சேவைகளை கூறி பதவிகளை ஏற்றுக் கொள்வதற்காக நாங்கள் ஒன்றுபடவில்லை. எதிர்காலத்தை நோக்கி பயணிப்பதே எங்களின் நோக்கமாகும்.

நாங்கள் ஒவ்வொருவரும் பாதுகாப்பாக இருப்பதாக நாம் உணர்ந்தாலும் ஒவ்வொரு நாளும், மாதமும் பாதாள குழுக்களினால் ஆட்கள் கொல்லப்படுகிறார்கள். ஒரு மாதத்துக்கு 54 – 60 பேர் வரையில் கொலை செய்யப்படுகிறார்கள். அதாவது, 14 மணிநேரத்துக்கு ஒருவர் கொலை செய்யப்படுகிறார். ஜனநாயக நாடு என்று எமது நாட்டை கூறிக்கொண்டாலும் 14 மணிநேரத்துக்கு ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு ஒருவர் வீதம் கொள்ளப்படுகிறார்.

இரண்டாவது விடயம், அநேகமானவர்கள் வாழ்க்கையை வெறுத்து தற்கொலை செய்துகொள்ளும் நிலைமை உருவாகியுள்ளது. ஒவ்வொரு நாளும் 09 பேர் வரையில் தற்கொலை செய்துகொள்கிறார்கள். மூன்று மணிநேரத்துக்கு ஒருவர் தற்கொலை செய்துகொள்கிறார்.

இது மாத்திரமல்ல, இதனைவிட பயங்கரமான செயற்பாடு என்னவென்றால் கற்ற, திறமையான இளைஞர்கள் தினந்தோறும் 300 பேர் வரையில் நாட்டிலிருந்து வெளியேறுகிறார்கள். எமது நாட்டை கைவிட்டுவிட்டு வெளிநாடுகளில் இருந்துவிடுகிறார்கள். இறுதியில் அழகுக்கலை நிலையங்களில் கடமையாற்றும் பிள்ளைகளே எஞ்சுவார்கள். இதுவே எமது நாட்டின் தற்போதுள்ள நிலைமையாகும்.

இந்த மூன்று விடயங்களையும் பொதுவாக கணக்கெடுத்துப்பார்த்தால் எமது சந்ததியினரின் எதிர்காலம் தொடர்பில் பயம் ஏற்படுகிறது. ஏனைய அரசியல் பிரச்சினைகளை விட இந்த நிலைமை பாரதூரமான பிரச்சினையை நாட்டில் ஏற்படுத்தும். அதன் காரணமாக கட்சி வேறுபாடுகள் எதுவுமின்றி நாட்டில் எதிர்காலத்தை சிந்திக்கும் நபர்கள் ஒன்றிணைந்து ஒரு வேலைத்திட்டத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும்.

# இங்கிரிய முத்துமாரி அம்மன் ஆலய வருஷாபிஷேகப் பெருவிழா





மணி ஶ்ரீகாந்தன்

இங்கிரிய, றைகம் கீழ்ப்பிரிவு, ஶ்ரீமுத்துமாரியம்மன் ஆலய வருஷாபிஷேகப் பெருவிழா நேற்று முன்தினம் (18) மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்தின் பிரதமகுரு கிரியாஜோதி, கிரியா குகசாகரம், சிவஶ்ரீ கணேச பரமசிவன் குருக்களின் தலைமையில் நடைபெற்ற இந்த பெருவிழாவில் 1008 சங்குகளுடன் சகஸ்ர சதா சங்காபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற்று, பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டதுடன் அன்றிரவு விசேட வசந்த மண்டப பூஜை, வேதபாராயணம், விசேட தீபாராதனை, தோத்திர பாராயணம் என்பன இடம்பெற்று ஶ்ரீமுத்துமாரியம்மன், பிள்ளையார், முருகன் மூம்மூர்த்திகளின் உள்வீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள்காட்சி தந்ததுடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

# பொத்துவில் பகுதிக்கு குடிநீர் விநியோகம்



மீராநகர் செய்தியாளர்

பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸின் வழிகாட்டலுக்கமைவாக, பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவியோடு பொத்துவிலில் குடிநீர் தட்டுப்பாடுள்ள பகுதிகளுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கிணங்க பொத்துவில்-26, ஹிஜ்ரா நகர் பிரதேசத்திலுள்ள சிரியா, ஜெய்கா மற்றும் றொட்டை போன்ற பகுதிகளுக்கு பொத்துவில் பிரதேச செயலக ஊழியர்களினால் குடிநீர் விநியோகிக்கப்பட்டது.

# நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள் பற்றிய மாநாட்டில் ஜனாதிபதி பங்கேற்பு





ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 78ஆவது கூட்டத்தொடருடன் இணைந்ததாக, நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் (18) ஆரம்பமான "நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளுக்கான மாநாடு - 2023" இல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணைந்துகொண்டார்.

2030ஆம் ஆண்டளவில் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை நோக்கிய முன்னேற்றத்தை அடைவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய புதிய நடவடிக்கைகள் குறித்து இங்கு ஆராயப்பட்டது.

இந்நிகழ்வில் காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, சர்வதேச புரிந்துணர்வுக்கான வர்த்தக கவுன்ஸில் மற்றும் அமெரிக்காவில் உள்ள இலங்கை தூதரகம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த "இலங்கையில் பொருளாதார வாய்ப்புகள்" என்ற தொனிப்பொருளில் நேற்று முன்தினம் நடைபெற்ற வர்த்தக வட்டமேசை கலந்துரையாடலிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார்.

இலங்கையில் முதலீடு மற்றும் வர்த்தக வாய்ப்புகள் பற்றி ஆராயும் அமெரிக்காவில் உள்ள 40க்கும் மேற்பட்ட வர்த்தக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் இலங்கையில் உள்ள தனியார்துறையின் உயர்மட்ட வர்த்தக பிரதிநிதிகள் மற்றும் அமெரிக்க அரசாங்கத்தின் சிரேஷ்ட பிரதிநிதிகளும் இந்த வட்ட மேசை கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# பாடசாலை மைதானத்தை பெற்றுத்தரக்கோரி மாணவர்கள், பெற்றோர் வீதிமறியல் போராட்டம்



பாடசாலை மைதானத்தை பெற்றுத்தருமாறு கோரி கிண்ணியா, காக்காமுனை அப்துல் ஹமீது வித்தியாலய மாணவர்கள், பெற்றோர் காக்காமுனை றஹ்மானியா பள்ளிவாசலுக்கு முன்னாலுள்ள சந்தியில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 25 வருடங்களாக பாடசாலை மைதானமாக பயன்படுத்தப்பட்டு வந்த மைதானத்தை தனி நபரொருவர் அத்துமீறி எல்லையிட்டுள்ளதைக் கண்டித்தே மேற்படி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"வேண்டும் வேண்டும் மைதானம் வேண்டும், போராடுவோம் போராடுவோம் மைதானம் கிடைக்கும் வரை போராடுவோம்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு போராட்டக்காரர்கள் கோஷமெழுப்பினர்.

இதன்போது சம்பவ இடத்துக்கு குறிஞ்சாக்கேணி கோட்டக்கல்வி அதிகாரி ஆர்.நஸீம், கிண்ணியா பிரதேச செயலாளர் முஹம்மது கனி ஆகியோர் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடி அது தொடர்பான விளக்கத்தை வழங்கியதோடு இதற்கான தீர்வுகளை பெற்றுத் தருவதாகவும் கூறினர்.

இதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தை கைவிட்டு மாணவர்கள் பாடசாலைக்கு சென்றனர்.

# கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் காயங்களுடன் ஒருவர் சடலமாக மீட்பு

ராகம, கிரிமெட்டிய மயானத்தின் பின் பகுதியிலிருந்து நபரொருவரின் சடலம் நேற்று முன்தினம் (18) மீட்கப்பட்டுள்ளது.

ராகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளதுடன் அந்தப் பிரதேசத்தை சேர்ந்த நபர் என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபரின் கைகளும் கால்களும் கட்டப்பட்டிருந்ததாகவும் உடலின் பல்வேறு இடங்களில் காயம் ஏற்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர் 27 வயதுடைய நபர் என்பதையும் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இவர்கள், கடந்த 17ஆம் திகதி மாலை பெனிவத்த, கட்டுதம்பே பிரதேசத்திலுள்ள உணவகமொன்றில் நண்பர்கள் சிலருடன் மதுபானம் அருந்தியுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அந்த விருந்துபசாரத்தின் பின்னர் அவர் அவ்விடத்திலிருந்து வெளியேறியுள்ளமை மேலும் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ரத்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மின்சார சபையில் 23,000 பணியாளர்கள்

## ஊழியர்களின் வளர்ச்சி கணிப்புகள் குறித்து பகுப்பாய்வு



இலங்கை மின்சார சபையில் இதுவரையான காலப்பகுதியில் 23 ஆயிரத்துக்கு அதிகமான ஊழியர்கள் கடமையாற்றுவதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

பணியாளர் விதிமுறைகள் மற்றும் நிலைகள் குறித்த அறிக்கை நேற்று முன்தினம் (18) மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்டது. முன்மொழியப்பட்ட மறுசீரமைப்பு செயல்முறைக்கு இணங்க மின்சார சபை நிர்வாகத்தால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. தற்போதுள்ள ஊழியர்களின் தேவைகள் மற்றும் விநியோகம், அவுட்சோர்ஸ் சேவைகள், செயல்பாட்டுக் கோரிக்கைகள், தொழில் அளவுகோல்கள், எதிர்கால வளர்ச்சி கணிப்புகள் ஆகிய விடயங்கள் இந்த அறிக்கையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய, இதுவரையில் தற்போது மின்சார சபையில் 23 ஆயிரத்து 419 பணியாளர்கள் பணிபுரிவதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.



''மலையகம் 200'' என்ற தொனிப்பொருளில் மலையக மக்களின் கலாசார கண்காட்சி களுத்துறை நகர மண்டபத்தில் நேற்று முன்தினமும் (18) நேற்றும் (19) நடைபெற்றது. சமூக அபிவிருத்தி நிறுவகமும் ஏசியன் லங்கா அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்த மேற்படி கண்காட்சி நிகழ்வினை பாடசாலை மாணவர்கள் உட்பட பொதுமக்கள் பார்வையிடுவதனை படங்களில் காணலாம்.

படப்பிடிப்பு: ரா.சேகர்

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 செப்டெம்பர் 20ஆம் திகதி, புதன்கிழமை

# இந்தியா–கனடா இராஜதந்திர நெருக்கடி

காலிஸ்தான் தீவிரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை தொடர்பில் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட நிலையில், கனடாவிலுள்ள இந்திய தூதுவரை நாட்டை விட்டு வெளியேறுமாறு கனேடிய அரசு உத்தரவிட்ட சில மணி நேரங்களிலேயே, கனடாவின் மூத்த தூதரக அதிகாரியை அடுத்த 5 நாட்களுக்குள் நாட்டை விட்டு வெளியேறுமாறு இந்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவுக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் வரவழைக்கப்பட்டு, இந்தியாவை தளமாகக் கொண்ட கனடா நாட்டின் மூத்த தூதரக அதிகாரியை வெளியேற்றும் இந்திய அரசின் முடிவு குறித்து தெரிவிக்கப்பட்டது.

''சம்பந்தப்பட்ட தூதுவர் அடுத்த ஐந்து நாட்களுக்குள் இந்தியாவை விட்டு வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்” என்று இந்தியாவின் உத்தியோகபூர்வ அறிக்கை தெரிவிக்கிறது.

ஜூன் 18 அன்று சீக்கிய கலாசார நிலையத்துக்கு வெளியே சுட்டுக்கொல்லப்பட்ட சீக்கியத் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜாரின் படுகொலையில் தொடர்பு இருக்கலாம் என்ற குற்றச்சாட்டின் பேரில் உயர்மட்ட இந்திய தூதரக அதிகாரியை கனடா வெளியேற்றிய ஒரு நாளுக்குப் பின்னர், புதுடில்லியில் இருந்து கனடா நாட்டின் தூதரக அதிகாரியை வெளியேற்ற உத்தரவிடப்பட்டது.

காலிஸ்தான் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜரை இந்திய அரசு கொன்றது என்ற கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் குற்றச்சாட்டை இந்தியா மறுத்துள்ளது. கனேடிய அரசின் இந்த குற்றச்சாட்டு, அடிப்படை ஆதாரமற்றது என்று இந்தியா மறுப்பு தெரிவித்துள்ளது. இந்தியாவில் தேடப்பட்டு வந்த நிஜ்ஜார், ஜூன் 18 அன்று, கனடாவின் சர்ரேயில் உள்ள குருத்வாராவுக்கு வெளியே வாகன நிறுத்துமிடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் கனடாவுக்குச் சென்ற நிஜ்ஜார், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தீவிரவாதி என்று இந்திய அரசால் அறிவிக்கப்பட்டார். சீக்கிய மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு காலிஸ்தான் என்ற பெயரில் இந்தியாவின் பஞ்சாப் மற்றும் பாகிஸ்தானின் பஞ்சாப் என சீக்கியர்கள் அதிகம் வசிக்கும் மாகாணங்களை இணைத்து தனி நாடு வேண்டும் என்ற கோரிக்கைகள் நீண்ட காலமாக எழுப்பப்பட்டு வருவதாகும். இந்த குறிக்கோளுடன் ஜர்னையில் சிங் பிந்தரன்வாலாவினால் காலிஸ்தான் இயக்கம் உருவாக்கப்பட்டது.

காலிஸ்தான் விடுதலைக்காக போராடிய இவர், இந்தியாவில் தீவிரவாதியாக அறிவிக்கப்பட்டார். இந்திய மத்திய உள்துறை அமைச்சகத்தின் கூற்றுப்படி, தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான KTF எனப்படும் காலிஸ்தான் புலிகள் படைக்கு ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி அளிப்பதில் நிஜ்ஜார் தீவிரமாக ஈடுபட்டு வந்தார் என்று கூறப்படுகிறது. அவர் கொல்லப்பட்டபோது, இந்தியாவில் சுதந்திர சீக்கிய தேசம் வேண்டும் என்பதற்காக அதிகாரபூர்வமற்ற பொது வாக்கெடுப்புக்கு ஏற்பாடு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது கனடாவின் குற்றச்சாட்டை அடுத்து இந்தியாவுக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் கெமரூன் மேக்கே, நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை புதுடில்லியில் உள்ள ரைசினா ஹில்லின் சவுத் புளொக்கில் இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் அழைப்பை ஏற்று சென்றிருந்தபோது, அவரிடம் செய்தியாளர்கள் கேள்விக்கணைகளை முன்னெடுத்தனர். இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதை அப்போதே உணர முடிந்தது.

எப்படியோ, இந்திய அரசால் கனடா மண்ணில் ஒரு படுகொலை நிகழ்த்தப்பட்டதாக அந்த நாட்டின் பிரதமர் தெரிவித்துள்ளமை அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆதாரங்களை ஜி20 மாநாட்டுக்கு சென்றபோது இந்திய பிரதமரிடம் கொடுத்துள்ளதாக கனேடிய பிரதமர் தெரிவித்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், கனேடிய பிரதமரின் கூற்றை மறுத்து கண்டனம் தெரிவித்துள்ள இந்திய அரசு, கனடாவில் உள்ள இந்தியத் தூதரகத்தை சேர்ந்த ஒரு அதிகாரியை அதன்பின்னரே வெளியேற உத்தரவிட்டுள்ளது.

கனேடிய பிரதமர் கூறியது உண்மை என்றால், இதற்கான ஆதாரங்களை பொது வெளியில் வெளியிடவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது. அதைப்போலவே இந்தியப் பிரதமரிடம் கொடுக்கப்பட்டுள்ள ஆதாரங்களையும் அவர் பொதுவெளியில் வைக்கவேண்டும் என்ற கோரிக்கைகளும் எழுந்துள்ளன. இது ஒரு உயிர் சம்பந்தப்பட்ட விஷயம் மட்டுமல்ல, 140கோடி இந்திய மக்களின் நிலைப்பாடு சார்ந்தது என்றும் பலரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

பிரிட்டிஷ் கொலம்பியா பகுதியில் கொல்லப்பட்ட ஹர்தீப் சிங் நிஜார் உண்மையில் குற்றவாளி எனில் இந்திய அரசு முறைப்படியான ஆதாரங்களை கொடுத்து சர்வதேச சட்டங்களின்படி இந்தியாவுக்கு கொண்டுவந்து விசாரணைக்குட்படுத்தியிருக்க வேண்டும் என்றும் அந்நிய மண்ணில் கொலைகளை செய்வது இந்தியா “எல்லை கடந்த பயங்கரவாதம்” குறித்து பேசுவதற்கான தார்மீக உரிமையை இழந்துவிடும் என்றும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இந்தியாவுக்கு இது இராஜதந்திர நெருக்கடி மட்டுமல்லாமல் நாட்டின் நற்பெயரை உலகில் நிலைநிறுத்தவேண்டிய முக்கியமான காலகட்டம். இந்தியாவைப் போன்றே கனடாவும் உலகின் முக்கியமான நாடு என்பதால் இரண்டு நாடுகளினதும் இந்த பிரச்சினைகளை மதிநுட்பமாக தீர்க்காவிடின் இந்த இராஜதந்திர நெருக்கடி மேலும் தீவிரமடையலாம்.

## இன்றைய நாளில்...

- 1498 – ஜெ ஜப்பானில் இடம்பெற்ற நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலையால் கோத்தோக்கு-இன் என்ற இடத்திலிருந்த பௌத்தகோவில் அழிந்தது. அன்றிலிருந்து அங்குள்ள மாபெரும் புத்தர் சிலை வெட்டவெளியில் காணப்படுகிறது.
- 1519 – பெர்டினென்ட் மகலன் 270 பேருடன் எஸ்பானியாவின் சான்லூகர் டி பரமேடா என்ற இடத்திலிருந்து உலகைச் சுற்றிவரப் புறப்பட்டார்.
- 1878 – தி இந்து முதலாவது இதழ் வெளியிடப்பட்டது.
- 1932 – மகாத்மா காந்தி பூனே சிறையில் உண்ணாநோன்பை ஆரம்பித்தார்.
- 1945 – மகாத்மா காந்தியும் ஜவஹர்லால் நேருவும் பிரித்தானியப் படைகளை வெளியேறக் கோரினர்.
- 1966 – சேர்வெயர் 2 விண்கலம் சந்திரனை நோக்கிச் செலுத்தப்பட்டது.
- 1990 – சவுக்கடி படுகொலைகள்: இலங்கை, மட்டக்களப்பு, ஏறாவூர்ப்பற்றில் சவுக்கடி கிராமத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 30 தமிழர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டு, தீயிட்டு எரிக்கப்பட்டனர்.

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள்;
# சர்வதேச விசாரணையையும் நீதியையும் வேண்டிநிற்கும் சர்வதேச குற்றச்செயல்



ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களுக்கு பின்னணியில் உள்ள கதையை வெளிப்படுத்துவதாகக் கூறும் சனல் -4 விவரணக் காணொளி அந்த தாக்குதல்களுக்கு பின்னணியில் இருந்திருக்கக்கூடியவர் யார், அவர்கள் ஏன் அவ்வாறு செய்தார்கள்? என்பது பற்றி நாட்டில் விவாதத்தை மீண்டும் வைத்திருக்கிறது. இதற்கு விடை காண்பது சுலபமானது அல்ல.

தற்கொலை குண்டுத் தாக்குதல்களை நடத்தியவர்களினதும் அதில் பலியானவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களினதும் அடையாளங்கள் தெரிந்தவையே. எட்டு தற்கொலைக் குண்டுதாரிகள் மரணமடைந்தார்கள். 269 அப்பாவி குடிமக்களும் மரணமடைந்தார்கள். குண்டுதாரிகள் சகலரும் முஸ்லிம்கள். அவர்களில் சிலர் மிகவும் படித்தவர்கள் என்பதுடன் வசதிபடைத்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தார்கள். அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக நம்பிய ஒரு இலட்சியத்துக்காக அன்றி மற்றும்படி அவர்கள் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்திருக்கமாட்டார்கள்.

பலியானவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் சிங்கள, தமிழ் கத்தோலிக்கர்கள். 45 பேர் வெளிநாட்டவர்கள். பலியானவர்களில் பெரும் எண்ணிக்கையான சிறுவர்களும் அடங்குவர். அவர்களில் மூவர் ஸ்கொட்லாந்தின் மிகப்பெரிய நிலச்சுவாந்தாரின் மூன்று பிள்ளைகள்.

எந்தவிதத்தில் நோக்கினாலும் இது சர்வதேச விசாரணையையும் சர்வதேச நீதியையும் வேண்டிநிற்கும் ஒரு சர்வதேச குற்றச்செயல். பதவியில் இருந்த அரசாங்கத்தை மலினப்படுத்துவதன் மூலமாக முன்னர் ஆட்சியில் இருந்தவர்களை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவருவதற்கு களத்தை அமைப்பதற்கு சதித்திட்டம் ஒன்றைத் தீட்டினார்கள் என்ற ஒரு கதையை சனல் - 4 விவரணக் காணொளியைத் தயாரித்தவர்கள் கூறுகிறார்கள்.

நாட்டின் தேசிய பாதுகாப்பு கட்டமைப்பின் பலவீனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிய ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் 07 மாதங்கள் கழித்து நடந்த ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெறுவதற்கு வழிவகுத்தது. வெளிநாடுகளில் தஞ்சம் கோருபவர்கள் சிலர் கூறும் விபரங்களைக் கொண்டிருக்கும் சனல் -4 விவரணக் காணொளி நாட்டின் புலனாய்வு இயந்திரத்தின் சில பிரிவினர் கோட்டாபய ராஜபக்ஷ தேர்தலில் வெற்றிபெறுவதற்கு வசதியான சூழ்நிலையை தோற்றுவிப்பதற்கு தற்கொலை குண்டுதாரிகளுடன் சேர்ந்து சதி செய்தார்கள் என்று கூறுகிறது.

ஈவிரக்கமற்ற இந்த குற்றச்செயலை செய்ததாக குற்றஞ்சாட்டப்படுபவர்களும் மற்றவர்களும் கோட்டாபய ராஜபக்ஷ தேர்தலில் வெற்றிபெறுவதற்கு உதவ தற்கொலை குண்டுதாரிகள் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்திருப்பார்கள் என்று கூறுவதில் தர்க்க நியாயம் இல்லை என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவர் தனது சகோதரர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் பாதுகாப்பு செயலாளராக இருந்தபோது முஸ்லிம்களுக்கு எதிரான பெரிய கலவரங்களினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் இலங்கை முஸ்லிம்கள் அவர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று சர்வ வல்லமையும் கொண்டவராக வருவதை விரும்பியிருக்க முடியாது.

இலங்கையில் முஸ்லிம்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையில் பகைமை வரலாறு ஒன்று இல்லாதபோது தற்கொலைக் குண்டுதாரிகள் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ சமூகங்களை இலக்காக தெரிவு செய்திருப்பதற்கான சாத்தியத்தையும் மேற்சொன்ன காரணம் இல்லாமல் செய்கிறது.

அவர்கள் ஏதாவது ஒரு சமூகத்தை தங்கள் தாக்குதல்களுக்கு இலக்காக தெரிவுசெய்வதாக இருந்தால் அது பௌத்தர்களாகவே இருந்திருக்கக்கூடும். பௌத்தர்களில் சில பிரிவினர் பிக்குமாரின் தலைமையில் பல சந்தர்ப்பங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக கலவரங்களில் ஈடுபட்டார்கள். அதனால் குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் வெளிச்சூத்திரதாரி இருந்திருக்கவேண்டும்.

### தோல்விகண்ட விசாரணைகள்

குண்டுத் தாக்குதல்களுக்கு பிறகு குறைந்த பட்சம் இரு மாதங்களாக நாட்டில் குறிப்பாக நகரப் பகுதிகளில் பீதி நிலவியது என்பது அந்த தாக்குதல்களில் இருந்த அதிர்ச்சிகரமான அம்சத்தை வெளிக்காட்டியது. ஏக காலத்தில் ஒரே மாதிரியான ஆறு குண்டுத் தாக்குதல்களுக்கு வழிவகுத்த மிகவும் கச்சிதமும் நுட்பமும் நிறைந்த திட்டமிடல் அதை நடத்தியவர்களிடம் முப்பது வருடகாலமாக அரசாங்கத்துக்கு எதிராகப் போரில் ஈடுபட்ட விடுதலைப் புலிகளிடமும் இருந்திராத உட்கட்டமைப்பு ஒன்று இருந்தது என்பதை உணர்த்தியது.

இதை உணர்ந்த நிலையில், குண்டுத் தாக்குதல்களுக்கு பிறகு நீண்டகாலமாக மக்கள் மத்தியில் ஒரு நெருக்கடிக்குள் வாழ்கிறோம் என்ற எண்ணம் தொடர்ந்து நீடித்தது. கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல, ஏனைய சமூகத்தவர்கள் மத்தியிலும் அடுத்த இலக்கு தாங்களாக இருக்கக்கூடுமோ என்ற பீதி நிலவியது.

அத்தகைய பயங்கரமான உட்கட்டமைப்பை பெரும்பாலும் கொண்டிருக்கக் கூடியவர்கள் அந்த நேரத்தில் ஐரோப்பாவையும் மத்திய கிழக்கையும் இலக்கு வைத்து குண்டுத்தாக்குதல்களை நடத்திக்கொண்டிருந்த ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக் மற்றும் சிரியாவின் இஸ்லாமிய அரசு) இயக்கத்தவர்களாகவே இருக்கமுடியும் என்று நம்பப்பட்டது. ஆனால், பதற்ற நிலை தணிந்து அரசாங்கம் மாறியதும் அந்த இயக்கம் இலங்கையில் எந்த அக்கறையையும் காட்டவுமில்லை. எந்த வடிவிலும் அது மீளத் தோன்றவுமில்லை.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களுக்கு பின்னரான கடந்த நான்கு வருட காலப்பகுதியில் அரசாங்கம் பல்வேறு விசாரணைகளை நடத்தியது.

குண்டுத் தாக்குதல்களுக்கு பிறகு விரைவாக மே 22, 2019 சபாநாயகர் நியமித்த பாராளுமன்ற தெரிவுக்குழு 23 ஒக்டோபர் 2019 அதன் அறிக்கையைக் கையளித்தது. அந்தக் குழுவில் பல்வேறு அரசியல் கட்சிகள் அங்கம் வகித்த நிலையில் அதனால் கருத்தொருமிப்புடனான முடிவுகளுக்கு வருவது சாத்தியமில்லாமல் போய்விட்டது. இது எதிர்பார்த்திருக்கக்கூடியதே.

அதை தொடர்ந்து, 22 செப்டெம்பர் 2019 ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமித்தார். அது சிரமம் மிகுந்த விசாரணைகளுக்கு பிறகு பல தொகுதிகள் கொண்ட அறிக்கையை பெப்ரவரி 01, 2021 கையளித்தது. அந்த அறிக்கையை அரசாங்கம் பொதுமக்களுக்கு வெளியிடாதது மாத்திரமல்ல, முழு அறிக்கையையும் கோரிய திருச்சபைகளுக்கு கூட கொடுக்கவில்லை.

அதேவேளை, அடுத்து முன்னெடுக்கப்பட்ட பொலிஸ் விசாரணைகள் மோசமான திருப்பத்தை ஏற்படுத்தியது. உயர்மட்ட பொலிஸ் விசாரணையாளர்களில் சிலர் தாங்கள் சட்டமீறல்களைச் செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டனர். அவர்களில் ஒருவர், தான் கொடுமைப்படுத்தப்படக்கூடும் என்ற பயத்தில் நாட்டைவிட்டு தம்பியோடினார். இந்த விசாரணையாளரின் குரலை சனல் - 4 விவரணக் காணொளியில் கேட்கக்கூடியதாக இருந்தது.

இலங்கையில் உண்மையைத் தேடுதலும் பொறுப்புக் கூறலும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களுக்கு அப்பால் செல்கிறது.

1971ஆம் ஆண்டுக்கு பிறகு இலங்கை பாரிய வன்முறைக் காலப்பகுதிகளுக்கு முகங்கொடுத்தது. அவற்றின் உண்மையும் பொறப்புக்கூறலும் இன்னமும் மறைந்தே கிடக்கிறது. 1988/ 1989 கிளர்ச்சிக் காலப்பகுதியில் இறந்தவர்கள் அல்லது காணாமல் போனவர்களின் எண்ணிக்கை இதுவரை தெரியாது. அது ஆயிரக்கணக்கில் இருக்கலாம்.

அந்த கிளர்ச்சிகளில் உயிர்தப்பி வாழ்பவர்களும் அவர்களின் குடும்பங்களும் இன்னமும் அந்த நினைவுகளுடனேயே வாழ்கிறார்கள். உண்மையும் நீதியும் வெளிக்கிளம்பும் என்ற நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் நான்கு தசாப்தங்கள் கடந்தும் எதையும் காணமுடியவில்லை.

2009ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த உள்நாட்டுப்போரில் இதை விடவும் கூடுதல் எண்ணிக்கையானவர்கள் மரணமடைந்தார்கள், காணாமல்போனார்கள். அவர்களின் குடும்பங்களும் அந்த நினைவுகளுடன் வாழ்வதுடன் உண்மை கண்டறியப்பட்டு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் கொண்டிருக்கிறார்கள்.

### நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புதல்

2009ஆம் ஆண்டில் போர் முடிவுக்கு வந்தது முதல் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கேள்விக்குட் படுத்தப்படும் சில நாடுகளில் இலங்கையும் ஒன்றாக இருந்துவருகிறது. 2015 தொடக்கம் 2018 வரை ஒரு குறுகிய காலப்பகுதிக்கு ஐக்கிய நாடுகள் தீர்மானங்களுடன் ஒத்துழைப்பதற்கு இலங்கை இணங்கியதுடன் நாட்டுக்கு அனுகூலமான அறிவிப்புகளையும் காணக்கூடியதாக இருந்தது.

ஆனால், மீண்டும் இலங்கை பாதகமான நிலைமைக்கு திரும்பியிருக்கிறது போன்று தெரிகிறது.

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் கடந்த வாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் இலங்கை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளில் மிகவும் அடிப்படையானது பொறுப்புக்கூறல் இன்மையாகும் என்று குறிப்பிட்டார்.

போர்க் காலப்பகுதியின் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றங்களுக்கு மேலதிகமாக விசாரிக்கப்படவேண்டிய மக்களுக்கு எதிரான விவகாரங்களின் பட்டியலில் ஐக்கிய நாடுகள் முறைமை இப்போது ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களையும் திடீர் பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களையும் சேர்த்திருக்கிறது. இவை உண்மை மற்றும் பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்தப்பட வேண்டியவையாகின்றன.

நம்பிக்கையும் நல்லெண்ணமும் இன்மையே இலங்கையில் இன்று ஆட்சிமுறையின் பிரதான பிரச்சினையாகும். இதை மீளக்கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும். மக்களும் அரசாங்கத்தை நம்பவில்லை, அரசாங்கமும் மக்களை நம்பவில்லை என்றே தோன்றுகிறது.

நம்பிக்கை ஏற்படவேண்டுமானால் வெளிப்படைத் தன்மையும் உண்மையும் இருக்கவேண்டியது அவசியமாகும். உண்மையைக் கண்டறிவதற்கு அரசாங்கம் முன்னெடுத்த விசாரணைகளின் தொடர்ச்சியான தோல்விகளின் விளைவாக அரசாங்கத்தில் நம்பிக்கையில்லாமல் போய்விட்டது. அதனால் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படக்கூடிய எந்தவொரு விசாரணையையும் மக்கள் அக்கறையுடன் நோக்கப்போவதில்லை. அதை காலத்தை கடத்தும் ஒரு செயலாகவே அவர்கள் கருதுவார்கள்.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையில் விசாரணைக்குழு ஒன்றை நியமித்திருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் சூத்திரதாரி ஒருவர் இருந்ததாக முன்னாள் சட்டமா அதிபரினால் கூறப்பட்ட குற்றச்சாட்டை விசாரிக்க பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிப்பதற்கான தனது உத்தேசத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

இந்த இரு விசாரணைகள் நிறைவுபெற்றதும் அவற்றின் அறிக்கைகள் அடுத்து முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இறுதித் தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

ஐயகோ, ஜனாதிபதியின் இந்த முன்மொழிவுகள் ஏற்கெனவே வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படாத விசாரணைக் குழுக்களையும் அவற்றின் அறிக்கைகளையும் ஒத்தவையாகவே தெரிகிறது.

முன்னைய உள்நாட்டு விசாரணைகளின் ஊடாக குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் இருந்திருக்கக்கூடியவர்கள் அடையாளம் காணப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு அவர்களை பொறுப்புக்கூறவைக்கத் தவறியமையே சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ச்சியாக எழுவதற்கு வழிவகுத்தது. உண்மையையும் நீதியையும் பெறுவதற்கு சர்வதேச விசாரணையை பிரதானமாக கத்தோலிக்க திருச்சபையும் பாதிக்கப்பட்ட குடும்பங்களும் கோரிநிற்கின்றன.

சனல் -4 விவரணக் காணொளி வெளியான பிறகு சர்வதேச ஆதரவுடனான விசாரணைக்கு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவும் கோரிக்கை விடுத்திருக்கிறார். உண்மை வெளிவருவதற்கு எதிராக வலிமையான சக்திகள் அணிதிரண்டு நிற்பதற்கு மத்தியில், ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் உண்மையில் பயங்கரவாதிகளின் செயலா அல்லது சிலரை அதிகாரத்துக்கு கொண்டுவருவதற்கு தீட்டப்பட்ட சதித்திட்டம் ஒன்றின் விளைவா என்பதை மக்கள் தெரிந்துகொள்ளக்கூடியதாக சந்தேகங்களைத் தெளிவுபடுத்த நம்பகமான விசாரணை தேவை என்று துணிச்சலுடன் அவர் கூறியிருக்கிறார்.

‘அரகலய’ போராட்ட இயக்கத்தினால் பதவியில் இருந்து விரட்டப்பட்ட ஜனாதிபதிக்கு பதிலாக பதவிக்கு வந்த ஜனாதிபதியும் அதே பாதையைத் தொடருவது ஒரு முரண்நகையாகும் என்றும் பிரேமதாச கூறியிருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரும் பாதிக்கப்பட்டவர்களினதும் கத்தோலிக்கத் திருச்சபை போன்ற அவர்களின் பிரதிநிதிகளினதும் துடிப்பான பங்கேற்புடன் சர்வதேச ஆதரவுடன் சம்பந்தப்பட்ட சகல தரப்புகளையும் உள்ளடக்கிய சுயாதீனமானதும் வெளிப்படையானதுமான அகல்விரிவான விசாரணையொன்றை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார். ஐக்கிய நாடுகளின் இந்த கோரிக்கை உள்நாட்டுப் போரின்போது இறந்துபோன அல்லது காணாமல்போன ஆயிரக்கணக்கானவர்களின் கதி பற்றிய உண்மையைக் கண்டறிய தமிழ் மக்கள் கோருகின்ற விசாரணையை ஒத்ததாக இருக்கிறது.

இந்த பிரச்சினைகளில் சம்பந்தப்பட்டவர்கள் உண்மை வெளிவருவதை விரும்பவில்லை என்ற அறிவுபூர்வமான முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது.

சர்வதேச பங்கேற்புடனான அத்தகைய விசாரணை ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் மாத்திரமல்ல உள்நாட்டுப்போர் மற்றும் பொருளாதார வீழ்ச்சி தொடர்பிலும் பொறுப்புக்கூறலையும் நீதியையும் உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் மெய்யான நோக்கங்களில் இலங்கை மக்களும் பாதிக்கப்பட்டவர்களும் சர்வதேச சமூகமும் நம்பிக்கை வைக்க உதவும்.

அத்தகைய விசாரணை ஒரு மேலதிக பயனாக, சர்வதேச உதவி உச்சபட்சமாக தேவைப்படுகின்ற ஒரு நேரத்தில் நாட்டுக்கு உதவமுடியும்.



**கலாநிதி ஜெகான் பெரேரா**

## நக்கல் நமசிவாயம்

கிரிக்கெட் ஆசிய கப் பைனல் போட்டி பார்க்க போனாராம் ரசிகர் ஒருவர்..

மைதான கேட்டடியில போகேக்க 4 விக்கட்டுகள் போயிருந்ததாம் ..

சரியான ஆசனத்தை தேடி பெவிலியனுக்கு போகும்போது இன்னுமொரு 3 விக்கட்டுகள் போயிருந்ததாம் ...

கடைசியா சீட்டில உட்காரும்போது மெட்ச் முடிஞ்சுபோய்விட்டதாம்...



# தொழில் ரீதியான ஊடகவியலாளர்களை உருவாக்க நிறுவனமொன்றை ஸ்தாபிக்க புதிய சட்டம்

## துறைசார் மேற்பார்வைக்குழுவில் விஷேட கவனம்



ஊடக அறிக்கையிடலின்போது அமைச்சுகள், திணைக்களங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களிடமிருந்து சரியான தகவல்களை விரைவாகப் பெற இயலாமை செய்திகளை அறிக்கையிடுவதில் பிரதான தடையாக உள்ளதாக ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் அண்மையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழுவில் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

விஷேடமாக ஒருசில ஊடக செயலாளர்கள் அந்த ஒருங்கிணைப்பை முறையாக மேற்கொள்ளாததன் காரணமாக அரசாங்கத்தின் சிறந்த அபிவிருத்தித் திட்டங்களும் மக்களுக்கு சென்றடைவதில்லை என அவர்கள் குறிப்பிட் டுள்ளனர்.

அதற்கமைய, இவ்விடயம் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தி அது தொடர்பான வேலைத்திட்டத்தைத் தயாரிக்குமாறு வெகுஜன ஊடக அமைச்சின் மேலதிக செயலாளர் ஈ.எம்.எஸ்.பி. ஜயசுந்தரவுக்கு குழு பரிந்துரைத்தது.

பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ராரச்சி தலைமையில் அண்மையில் இந்தக் குழு கூடியபோது இவ்விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறவேண்டிய அரசாங்கமொன்றில் சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஊடக நிறுவனத் தலைவர்களின் கருத்துகளையும் முன்மொழிவுகளையும் பெறுவதற்கு இந்தக் குழு கூடியதுடன், இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் தலைவர்கள் பலர் இதில் கலந்துகொண்டனர்.

ஜனநாயகம் சிறந்த முறையில் செயற்படுவதற்கு ஊடகங்கள் மேற்கொள்ளும் பணிகளைப் பாராட்டிய குழுவின் தலைவர், சமூகத்தின் முன்னோடியான ஊடகவியலாளர்களுக்கும் ஊடக நிறுவனங்களுக்கும் காணப்படும் சிக்கல்கள் மற்றும் தடைகளையும் தாண்டி முன்னோக்கிச் செல்வதற்கு இந்தக் குழுவினால் தேவையான பரிந்துரைகளையும் முழுமையான ஆதரவையும் வழங்குவதாகச் சுட்டிக்காட்டினார்.

தொழில் ரீதியான ஊடகவியலாளர்களை உருவாக்குவதற்குப் பயிற்சி நிறுவனமொன்றை ஸ்தாபிப்பது தொடர்பிலும் கவனஞ்செலுத்தப் பட்டது.

இது தொடர்பில் தற்பொழுது சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டு வருவதாக செயலாளர் குறிப்பிட்டார். அந்தப் பணியை தாமதிக்காமல் விரைவாக செயற்படுத்துமாறு குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது. அத்துடன், வெகுஜன ஊடகக் கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கு குழுவொன்று இருப்பதாகவும், அதற்கு கருத்துகளையும் முன்மொழிவுகளையும் முன்வைக்குமாறு ஊடக நிறுவனங்களின் தலைவர்களுக்கு அழைப்பு விடுப்பதாக செயலாளர் குறிப்பிட்டார்.

அத்துடன், அச்சு ஊடகங்கள் முகங்கொடுக்கும் சிக்கலான நிலைமையில் மை, தாள் உள்ளிட்ட பொருட்களுக்கு ஏதாவதொரு சலுகையை அரசாங்கத்தினால் வழங்குவதற்கான இயலுமை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அரச இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் தற்பொழுது திறைசேரியில் தங்கியிருக்காமல் சுய வருமானம் ஈட்டுவதனால், ஊடக அறிக்கையிடல்களை இலவசமாக நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் சிரமங்கள் தொடர்பில் அரச ஊடகங்களின் தலைவர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர். அரச ஊடகங்களில் இலவசமாக பிரசாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என பிழையான கருத்தொன்று உருவாகியுள்ளதாகவும், தொடர்ந்து அவ்வாறு மேற்கொண்டு இந்த நிறுவனங்களை நடத்திச் செல்ல முடியாது என்பதால் இது தொடர்பில் தலையிடுவதன் அவசியம் தொடர் பிலும் அவர்கள் சுட்டிக்காட்டினர். அதற்கமைய, இது தொடர்பில் பரிந்துரைகளை மேற்கொள்ள குழு தலையிடுவதாக குழுவின் தலைவர் தெரிவித்தார்.

குற்றவியல் அறிக்கையிடல் தொடர்பிலும் கவனஞ்செலுத்தப்பட்டது. இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் குற்றங்களை அறிக்கையிடும் போது அவை ஊடக நெறிமுறைகளுக்கமைய அறிக்கையிடுவதன் அவசிய தொடர்பில் வலியுறுத்தப்பட்டது.

அத்துடன், ஊடக அலைவரிசைகளை தரவரிசைப்படுத்துவதற்கு வெளிப்படையான, சுயாதீன நிறுவனமொன்றை உருவாக்குதல், ஊடகவியலாளர்களின் பொருளாதார மற்றும் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நிதியம் ஒன்றை உருவாக்குதல், ஊடகவியலாளர்களின் தடைகளின்றி அறிக்கையிடும் உரிமையை உறுதிப்படுத்தல், போலித் தகவல்கள் தொடர்பான சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்தல், ஊடக அனுமதிப்பத்திரம் வழங்குவதில் காணப்படும் சட்டத்தைத் திருத்துவதன் அவசியம் போன்ற விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அதற்கமைய, இது தொடர்பான பரிந்துரைகளைப் பாராளுமன்றம் ஊடாக அரசாங்கத்துக்கு முன்வைப்பதற்கு எதிர்பார்ப்பதாகக் குழுவின் தலைவர் ஜகத் குமார சுமித்ராரச்சி தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் (ஜனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்கவும் இந்தக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

ஸ்ரீ ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (19.09.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 203.2228 | 214.1410 |
| கனேடியன் டொலர் | 234.5873 | 246.1642 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 43.2337 | 45.7989 |
| யூரோ | 338.6503 | 354.3157 |
| ஜப்பான் யென் | 2.1471 | 2.2440 |
| சிங்கப்பூர் டொலர் | 232.1073 | 243.2686 |
| ஸ்ரேலிங் பவுன் | 392.9961 | 409.7921 |
| சுவிஸ் பிரான்ங் | 351.6612 | 370.4425 |
| ஐ.அ. டொலர் | 318.2630 | 329.6034 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 859.5560 |
| குவைட் | குவைட் தினார் | 1,047.9404 |
| ஓமான் | ஓமான் றியால் | 840.7912 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.8066 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 86.3062 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 88.1320 |

# மன்னார் மாவட்டத்தில் நீர் விநியோகத் தடை

பி.எம். (முக்தார்)

மன்னார் நீர் வழங்கல் திட்டத்தில் அவசர திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் இன்று (20) முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 6 மணி வரையில் 9மணிநேர நீர் விநியோகத்தடை பின்வரும் பகுதிகளில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

முருங்கன் மற்றும் அண்டிய பகுதிகள், மன்னார் நகர் மற்றும் அண்டிய பகுதிகள், பள்ளிமுனை மற்றும் அண்டிய பகுதிகள், எழுத்தூர் மற்றும் அண்டிய பகுதிகள், தோட்டவெளி, சிறுத்தோப்பு, எருக்கலம்பிட்டி, வங்காலை மற்றும் அண்டிய பகுதிகள், அடம்பன் மற்றும் அண்டிய பகுதிகள், திருக்கேதீஸ்வரம் மற்றும் நாகதழ்வு ஆகிய பகுதிகள் நீர் விநியோகத் தடையினால் பாதிக்கப்படும்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாகப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

# தியாவட்டவான் அறபா வித்தியாலயம் க.பொ.த. உயர்தர பரீட்சையில் சாதனை



கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று சாதனை படைத்த தியாவட்டுவான் அறபா வித்தியாலய மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

கஷ்டப்பிரதேச பாடசாலையான தியாவட்டுவான் அறபா வித்தியாலய கலைப் பிரிவு மாணவர்கள் எட்டுப்பேர் முதற்றடவையாக கடந்த 2022ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி அவர்களுள் நான்கு மாணவிகள் பலகலைக்கழகத்துக்கும் இரண்டு மாணவிகள் கல்வியியல் கல்லூரிக்கும் தகுதிபெற்று சாதனை படைத்துள்ளனர்.

இந்நிலையில், இம்மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.எல்.எம்.இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது சித்தியடைந்த மாணவர்கள், கற்பித்த ஆசிரியர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு கௌரவிக்கப்பட்டனர் .

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஜ்மீர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

இதன்போது பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவர்கள், கற்பித்த ஆசிரியர்கள், பாடசாலையில் உயர்தர வகுப்பு ஆரம்பிப்பதற்கு முயற்சித்த பிரதேச பள்ளிவாயல் நிர்வாகத்தினர், கல்வி அதிகாரிகள், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் உட்பட அனைவருக்கும் பாடசாலை சார்பாக அதிபர் நன்றி தெரிவித்தார்.

# உறுகாமம் கிராமத்தில் யானைகள் அட்டகாசம்



மட்டக்களப்பு செய்தியாளர்

மட்டக்களப்பு, செங்கலடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட உறுகாமம் கிராமத்துக்குள் நேற்று அதிகாலை வேளை உட்புகுந்த காட்டு யானைகள் வீடுகளையும் பயிர்ச்செய்கையையும் சேதமாக்கியுள்ளதுடன் மக்களும் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளனர்.

மேற்படி பிரதேசங்களில் அதிகரித்துள்ள யானைகளின் அட்டகாசத்தைக் கட்டுப்படுத்துமாறு பலதடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிட்டும் இதுவரை அதற்கான எதுவித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லையெனவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யானைகளின் அச்சுறுத்தல் காரணமாக கிராமத்தை விட்டு மக்கள் இடம்பெயர்ந்தும் வருகின்றனர்.

யானைகளின் அட்டகாசத்தால் பாதிக்கப்பட்ட ஒருவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், ''வீடு சேதமாக்கப்பட்டு நான் காயங்களுக்குள்ளாகி மயிரிழையில் உயிர்தப்பியுள்ளேன்'' - எனத் தெரிவித்தார்.

## பேரினவாதிகளுடனான இணக்க அரசியல்

# தமிழ் மண்ணையும் மக்களையும் அதிகார வர்க்கத்துக்கு விற்றுப் பிழைப்பதாகவே அமையும்

## முன்னாள் எம்.பி. ஞானமுத்து சிறிநேசன் தெரிவிப்பு





செங்கலடி செய்தியாளர்

பேரினவாதிகளுடனான இணக்க அரசியல் என்பது தமிழ் மண்ணையும் மக்களையும் அதிகார வர்க்கத்துக்கு விற்றுப் பிழைப்பதாகவே அமைகின்றது என முன்னாள் எம்.பி. ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - மயிலத்தமடு,பெரிய மாதவனை மேய்ச்சல் தரைப் பகுதியில் இடம்பெறும் அத்துமீறல்களைக் கண்டித்து பண்ணையாளர்கள் சித்தாண்டியில் முன்னெடுத்துள்ள சுழற்சிமுறையிலான அறவழிப் போராட்டம் நேற்று (19)ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்தது.

இப்போராட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், மயிலத்தமடு மற்றும் பெரிய மாதவனை மேய்ச்சல் தரைப் பிரதேசங்களில் நீண்ட காலமாக கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை வளர்த்து வருகின்றார்கள்.இதன் மூலமாக 1,000 இற்கும் மேற்பட்ட பண்ணையாளர்கள் தமது வாழ்வாதாரத்தைப் பெற்று வருகின்றார்கள்.

இங்கு சுமார் 5,00,000 – 6,00,000 கால்நடைகள் பராமரிக்கப்படுகின்றன. இதற்கு அடுத்த மாவட்டமாக பொலன்னறுவை, அம்பாறை மாவட்டங்கள் உள்ளன.யுத்த முடிவின் பின்னர் பிக்குவின் தலைமையில் அயல் மாவட்டங்களிலுள்ள சிங்களவர்கள் மேய்ச்சல் தரைப்பகுதியை, சேனைப்பயிர்ச் செய்கை என்ற போர்வையில் சட்டவிரோதமாக ஆக்கிரமித்து வருகின்றார்கள்.

ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக பொலிஸாரோ மற்றும் அரச அதிகாரிகளோ எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. அதேவேளை, மகாவலி அதிகாரசபை, மகாவலி அமைச்சு சட்டவிரோத ஆக்கிரமிப்பாளர்கள் சிங்களவர்கள் என்பதால் மறைமுகமாகவும் நேரடியாகவும் ஆதரவளித்து வருகின்றார்கள்.

இந்த அத்துமீறிய குடியேற்றத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன், கருணாகரம் ஆகியோர் 2021 ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்தனர். நீதிமன்றத் தீர்ப்பானது ஆக்கிமிப்பாளர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்பதாக அமைந்தது.

நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி ஆயிரக்கணக்கான ஏக்கர் மேய்ச்சல் தரைகள் பல நூற்றுக்கணக்கான சிங்கள ஆக்கிரமிப்பாளர்களால் பிக்கு தலைமையில் தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப்படுகின்றது.

மேய்ச்சல் தரை அபகரிப்பு, நீதி மன்றத்தீர்ப்பை நடைமுறைப்படுத்தாமை, உயிர் அச்சுறுத்தல், தாக்குதல்கள் கால்நடைகள் மீதான துப்பாக்கிச் சூடு, கால்நடைத்திருட்டு என்பவற்றை எதிர்த்து நூற்றுக்கணக்கான பண்ணையாளர்கள், விவசாய அமைப்புகள் சாத்வீக ரீதியில் சித்தாண்டி பிரதான வீதிக்கு அருகாமையில் இரவு பகலாக சுழற்சி முறையில் போராடி வருகின்றனர்.

தமிழ்த் தேசியப் பாராளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக அமைப்பினர் இதற்கான ஆதரவை வழங்கி வருகின்றனர். ஆனால், மட்டக்களப்பு அரசாங்க அதிபர், கிழக்கு மீட்பர்கள் என்று மார்தட்டும் இரு இராஜாங்க அமைச்சர்கள் வெறும் வாக்குறுதிகளைக் கூறிவிட்டுச் சென்றுவிட்டார்கள். போராட்டம் தொடர்ந்தும் நடைபெறுகின்றது.

கிழக்கு மீட்பர்கள் மறைமுகமாக சிங்கள ஆக்கிரமிப்பாளர்களுக்கும் பிக்குகளுக்கும் ஆதரவளிப்பதாக மக்கள் நம்புகின்றனர் - என்றார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.09.18
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5241
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,994,872.00
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 2 3 5 4 2 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3483
சீட்டிழுப்பு திகதி 2023.09.18
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 61,115,147.20
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 11 28 56 62
விசேட எழுத்து O
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 67781

லக்கி 7
திகதி 18.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0067
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 3 0 0 5 5 8
L7 இலக்கம் 1 6
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,931,872.48

தன நிதானய
தேதி 2023/09/18
சீட்டிழுப்பு இலக்கம் 1271
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 110,764,426.40
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 01 07 31 37
விஷேட ஆங்கில எழுத்து F
Double Chance இலக்கம் 24707

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு திகதி 2023-09-18
சீட்டிழுப்பு இலக்கம் 550
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,119,662.40
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 01 03 27 35
விசேட இலக்கினம் மேஷம்

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1589 18/09/2023
73116
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 408,217,152.00
ஆங்கில எழுத்து H
சுப்பர் இலக்கம் 20
வெற்றி இலக்கங்கள் 13 44 53 71
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# ஐக்கிய நாடுகள் சபை மீதான நம்பிக்கை தமிழ் மக்களுக்கு குறைந்து வருகின்றது

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு

மன்னார் நகர் நிருபர்

ஐக்கிய நாடுகள் சபை வலுவான அல்லது ஆக்கபூர்வமான தீர்மானங்களைக் கொண்டுவந்து இலங்கை அரசாங்கத்தின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதும் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு மனித உரிமை மீறல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பதும் எமது மக்களின் கோரிக்கையாகவும் ஆவலாகவும் உள்ளது.

ஆனாலும், ஐ.நா. சபையில் தீர்மானங்கள்



வருகின்றபோதெல்லாம் இலங்கை அரசாங்கம் ஐ.நா. சபையை ஏமாற்றுகின்ற வகையில் காலங்கள் கொடுக்கப்பட்டாலும் அவற்றை நடைமுறைப்படுத்தாது தொடர்ந்தும் காலநீடிப்பைப் பெறுவதற்கான உத்திகளைக் கையாண்டு வருகின்றது. அதற்கேற்ற வகையில், ஐ.நா. சபையும் அவர்களுக்கு வாய்ப்பை வழங்கும் விதமாகவே நடந்துகொள்கின்றது. இதனால் தமிழ் மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் மீதான நம்பிக்கை குறைந்து வருகின்றது – என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் ரெலோ கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்முறையும் ஐக்கிய நாடுகள் சபையில் முன்வைக்கப்பட்ட அறிக்கை வலுவான காட்டமான அறிக்கையாக காணப்பட்டாலும் அதையும் இந்த இலங்கை அரசாங்கம் ஏமாற்றுகின்ற நிலை தொடர்ச்சியாக காணப்படுகின்றது. இந்த ஐ.நா. சபையானது கடந்த காலத்திலும் காலநீடிப்பைப் பெற்று தங்களால் எதுவும் செய்ய முடியாது என்பதை சர்வதேசத்துக்கு நிரூபித்திருக்கின்றது.

எனவே, தொடர்ச்சியாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கைகளை வெளியிடுவதை நிறுத்திவிட்டு அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முயற்சி எடுக்கவேண்டும். அதே நேரம் இந்தியாவும் இலங்கையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு தெரிவித்துள்ளது.

ஆனாலும் இலங்கை அரசாங்கம் இதை நடைமுறைப்படுத்துவதை விடுத்து சர்வதேசத்தை ஏமாற்றும் விதத்தில் செயற்படுவதுடன், ஐக்கிய நாடுகள் சபையில் நேரடியாக சாட்சியம் வழங்கும் காணாமலாக்கப்பட்ட உறவினர்கள் மற்றும் காணி ஆக்கிரமிப்பு, மனித உரிமை மீறல் விடயங்கள் தொடர்பான சாட்சியங்களை வலுவற்றதாக மாற்றுகின்ற விதத்தில் ஐ.நாவை ஏமாற்றி வருகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு எதிராக காட்டமான அறிக்கைகளை வெளியிடும்போது தமிழ் மக்களுக்கு ஆறுதலாக இருந்தாலும் அவை நடைமுறைப்படுத்தப்படாதபோது அவர்கள் ஏமாற்றமடைகின்றனர்.

எனவே, இந்த நிலை மாற வேண்டுமென்றால் ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கையில் மனித உரிமை மீறல்களை மேற்கொண்டவர்களை நிறுத்தவேண்டும் என்பதுடன் தமிழ்மக்களின் நியாயமான தீர்வுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

# சிறுமியின் கை அகற்றப்பட்ட விவகாரம்: சட்ட வைத்திய அதிகாரி அறிக்கை நீதிமன்றுக்கு

பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிறுமி ஒருவரின் கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்ட விவகாரம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் தெரிய வருவதாவது,

காய்ச்சல் காரணமாக கடந்த மாத இறுதியில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் 12ஆம் இலக்க விடுதியில் சேர்க்கப்பட்ட சிறுமியின் இடது கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டது. குறித்த சம்பவம் தொடர்பில் சிறுமியின் பெற்றோர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்தனர்.

கடந்த 13ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு வந்தபோது நீதவான் சிறுமியின் கை அகற்றப்பட்டமை தொடர்பில் அறிக்கை தருமாறு மூவர் அடங்கிய நிபுணர் குழுவை நியமித்தார்.

விசாரணைக் குழுவின் அறிக்கை கிடைப்பதற்கு மேலும் 10 நாட்கள் எடுக்கும் நிலையில் வழக்கை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு நீதவான் ஒத்திவைத்தார்

இந்நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி சிறுமியின் கை அகற்றப்பட்டமை தொடர்பில் போதனா வைத்தியசாலை சார்பில் மருத்துவ அறிக்கை ஒன்றை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்.

# கிளிநொச்சியில் நோயுற்ற குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கிவைப்பு





பாலநாதன் சதீஸ்

கிளிநொச்சியில் நோயால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிலையான பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் வாழ்வாதார உதவிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் தெரிவுசெய்யப்பட்ட கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட மூன்று குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்கோடு கனடா செந்தில்குமரன் நிவாரணத்தின் நிதி பங்களிப்பில் 8,35,000 ரூபா பெறுமதியான நிலையான வாழ்வாதார உதவிகள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

உதயநகர் கிளிநொச்சியில் மூன்று ஆண்டுகளாக சிறுநீரகம் பாதிக்கப்பட்டிருக்கும் முன்னாள் போராளி என்.சிறிபத்மநாதன் குடும்பத்தினருக்கு 2,55,000 பெறுமதியான அரிசி அரைக்கும் இயந்திரமும் இரத்தினபுரம் பகுதியில் கடந்த ஐந்து வருடமாக இரண்டு சிறுநீரகமும்



பாதிக்கப்பட்டிருக்கும் சுப்ரமணியம் சிவகுமார் குடும்பத்தினருக்கு 3,20,000 பெறுமதியான எண்ணெய் ஊற்றும் இயந்திரமும் வட்டக்கச்சி பகுதியில் பிறப்பிலிருந்து முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட சிறுமி மோகனாதாஸ் லுஜிதாவின் மருத்துவ செலவை ஈடுசெய்ய 2,60,000 ரூபா பெறுமதியான பால் மாடு ஒன்றும் வழங்கப்பட்டன.

# நடைபாதைகளை ஆக்கிரமிக்கும் வியாபார நிலையங்களால் பாதசாரிகளுக்கு பெரும் சிரமம்

வவுனியா நிருபர்

வவுனியா நகரசபைக்குட்பட்ட இடங்களிலுள்ள நடைபாதைகளை சிறு வியாபார நிலையங்கள் ஆக்கிரமித்துள்ளமையால் பாதசாரிகள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

வவுனியா பொது வைத்தியசாலை சந்தியிலிருந்து ஹொரவப்பொத்தான வீதி மற்றும் சந்தை உள்வட்ட வீதி என்பன இவ்வாறு நடைபாதை வியாபாரிகளின் ஆக்கிரமிப்பால் பாதசாரிகள் விபத்துகளை சந்திக்கும் நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

வியாபாரிகள் நடைபாதைகளை ஆக்கிரமித்து தமது வியாபாரத்தை மேற்கொள்வதனால் பாதசாரிகள் வீதியால் செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. சனநெருக்கடி நிறைந்த குறித்த பகுதியில் இவ்வாறான நிலைமை காணப்படுவதனால் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதுடன் விபத்துகளும் ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

இது தொடர்பில் கடந்த காலங்களில் நகரசபை நடவடிக்கை எடுத்திருந்தபோதிலும் அண்மைக்காலமாக நகரசபையும் இவ்விடயத்தில் தமது கண்காணிப்பை செலுத்தாமையால் தினந்தோறும் இவ்வாறான நடைபாதைகளை ஆக்கிரமிக்கும் வியாபார நிலையங்கள் அதிகாரித்து செல்கின்றன.

எனவே, தற்போதைய பொருளாதார நெருக்கடியான நிலையில் சிறு வியாபாரிகளும் பாதிக்கப்படாத வகையில் நகரசபை சிறந்த தீர்வை ஏற்படுத்த வேண்டும் என வரியிறுப்பாளர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

# கட்டுத் துப்பாக்கிச்சூட்டில் காயம்; சிகிச்சை பலனின்றி நபர் உயிரிழப்பு

ராமு தனராஜா

அரவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துனுகேவல, மஹகமாராவில் பகுதியில் கட்டுத் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மஹகமாரா, துனுகேவெல பகுதியைச் சேர்ந்த 61 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் நேற்று முன்தினம் (18) மதியம் தனது வீட்டுக்கருகில் உள்ள காட்டுப் பகுதியில் விறகு வெட்டச் சென்றதாகவும் காட்டுக்குள் கட்டுத் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலத்த காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இவர் பிபிலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டபோதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சடலம் பிபில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இதற்கான காரணத்தைக் கண்டறிய இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அரவ பொலிஸ் நிலையப் பொலிஸ் பரிசோதகர் பண்டார தலைமையில் பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

# பூநகரியில் உணவு கையாளும் நிலையங்களில் திடீர் பரிசோதனை

சாவகச்சேரி நிருபர்

பூநகரியிலுள்ள கடற்கரைச் சுற்றுலா உணவகம் மற்றும் வாடியடிப் பகுதி உணவகங்கள் ஆகியன பூநகரி மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர் குழுவால் நேற்று முன்தினம் (18) திடீர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது உணவகங்களின் சுகாதார மேம்பாட்டுக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டதோடு, சுகாதாரப் பாதுகாப்பின்றி தயார் செய்து விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த சிற்றுண்டிகள் அழிக்கப்பட்டு விரைந்து சீர்திருத்துவதற்கான கால வரையறைகளும் வழங்கப்பட்டன.

அத்துடன், உணவு கையாளும் ஊழியர்களின் தற்சுகாதாரம் மற்றும் உணவகங்களின் இறுதி



கழிவகற்றல் போன்றவற்றை சரியாகக் கடைப்பிடிக்காதவர்கள் எச்சரிக்கப்பட்டதோடு தொடர் கண்காணிப்புகளிலும் சுகாதார நடைமுறைகளை மீறி பொதுமக்களுக்கான உணவுச் சுகாதாரத்தை கேள்விக்குறியாக்குபவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# 'சுரங்கப் பாதைக்குள் சுடரொளி' கவிதை நூல் அறிமுக விழா










மலையகத்தின் பெண் கவிஞர் புவனேஸ்வரி சண்முகநாதனின் 'சுரங்கப் பாதைக்குள் சுடரொளி' எனும் கவிதை நூலின் அறிமுக விழா அண்மையில் ஹட்டனில் நடைபெற்றது. ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்தக் கவிதை நூல் அறிமுக விழாவுக்கு பண்டாரவளை மாநகர சபை ஆணையாளர் தனராஜ் கஜேந்திரகுமார் தலைமை தாங்கினார். மேலும் அறிமுக விழாவில் மலையக மூத்த எழுத்தாளர் கலாபூஷணம் சி.மகாலிங்கம் உட்பட இலக்கிய ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# இந்திய கவுன்சிலர் ஜெனரலும் ஊவா மாகாண ஆளுநரும் சந்திப்பு



ஹம்பாந்தோட்டை, காலி, மாத்தறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களின் நீதித்துறை அதிகார எல்லைக்குட்பட்டவாறு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்தியாவின் கவுன்சிலர் ஜெனரல் ஹர்விந்தர் சிங் (Harvinder Singh) க்கும், ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மிலுக்கும் இடையிலான நட்பு ரீதியான சந்திப்பொன்று அண்மையில் (13) ஊவா மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஊவா மாகாணத்துக்கும் இந்தியாவுக்குமிடையிலான நீண்டகால உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், அந்தப் பிணைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறப்பட்டன.

இந்சந்திப்பில் ஊவா மாகாண சபையின் பிரதம செயலாளர் தமயந்தி பரணகம மற்றும் ஆளுநரின் செயலாளர் ஆர்.எச்.சி.பிரியந்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மலைப்பாங்கான வீதியிலிருந்து கீழே விழுந்து முதியவர் ஒருவர் உயிரிழப்பு

அலவத்தை, பஹலகொட்டாஸ, பல்லகெடுவ பகுதியைச் சேர்ந்த 67 வயதுடைய முதியவர் மண்மேட்டிலிருந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு 7.00 மணியளவில் தனது வீட்டுக்கு நடந்து சென்றுகொண்டிருந்தபோது அவர் செல்லும் மலைப்பாங்கான வீதியின் மேலிருந்து கீழே விழுந்து கல்லில் தலை மோதியதாக உயிரிழந்தவரின் உறவினர் எல்ல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சடலம் பதுளை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.மேலதிக விசாரணைகளை எல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நாடகக் கலைஞரும் எழுத்தாளருமான மறவன்புலோ செல்லம் அம்பலவாணர் அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் கலாரத்ன விபூஷண் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். ஞாயிற்றுக்கிழமை (17) அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கொழும்பு வத்தளை நகர மண்டபத்தில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்விலேயே இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது. (தலவாக்கலை நிருபர்)**

# ஒலிப்பதிவு பேச்சுப் போட்டி

உக்குவளை மாருகொன வாசிப்போர் ஒன்றியம் உக்குவளை குரீவெல ஹமீதியா கல்லூரி மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும்முகமாக ஒலிப்பதிவு பேச்சுப் போட்டியொன்றை விரைவில் நடத்தவுள்ளது. போட்டியில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு வாசிப்போர் ஒன்றியம் பரிசில்களையும் வழங்கவுள்ளது. உக்குவளை பிரதேச பாடசாலைகளில் கற்கும் பல்வேறு திறமைகளை வைத்துக்கொண்டு இலைமறை காய்களாக இருக்கும் மாணவ - மாணவியர்களது திறமைகளை இனம்கண்டு அவர்களுக்குக் களம் அமைத்துக்கொடுக்க வாசிப்போர் ஒன்றியம் முன்வந்துள்ளது.

திறமைகள் உள்ளவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

தலைவர், வாசிப்போர் ஒன்றியம், 26/சீ, மாருகொன, உக்குவளை.

# மீலாத் கந்தூரி மஜ்லிஸ்

எம்.எம்.எம். ரம்ஸீன்

கெலிஓயா, கலுகமுவ அஸ்ஸாவியத்துல் பாஸியத்துல் சாதுலிய்யாவில் இவ்வருட மீலாந் கந்தூரி மஜ்லிஸ் எதிர்வரும் 29 மற்றும் 30ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு தொடர்ந்து 12 நாட்கள் மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து சுப்ஹான மௌலூந் ஓதப்பட்டு வருவதுடன் இஷா தொழுகையைத் தொடர்ந்து விசேட மார்க்கச் சொற்பொழிவு அஸ்ஸாவியத்துல் பாஸியத்துல் சாதுலிய்யாவின் தலைவர் மௌலவி எம்.ஐ.எம்.மர்ஜானால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

29ஆம் திகதி ராத்தீப் மஜ்லிஸ் நடைபெறவுள்ளதுடன் 30ஆம் திகதி காலை மௌலூந் நிகழ்வும் இடம்பெறும்.

# இரஜவெல்ல இந்து தேசியக் கல்லூரிக்கான கிரிக்கெட் - உள்ளக விளையாட்டரங்குக்கு அடிக்கல் நாட்டல்




































கண்டி, திகன இரஜவெல்ல இந்து தேசியக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிரிக்கெட் விளையாட்டு மைதானம் மற்றும் உள்ளக விளையாட்டு அரங்கின் நிர்மாணப் பணிக்காக அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த 15ஆம் திகதி கல்லூரியில் நடைபெற்றது.

113 வருட வரலாற்றினைக் கொண்ட இக்கல்லூரியின் நீண்ட கால தேவைப்பாடாக காணப்பட்ட அடிக்கல் நாட்டும் வைபவத்தில் இலங்கையின் சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் பெற்றோர்களான தொழிலதிபரும் சமூக சேவையாளருமான எஸ்.முத்தையா, திருமதி லக்ஷ்மி முத்தையா ஆகியோர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக தொழிலதிபர்கள், சமூக சேவையாளர்களுமான ஏ.பி.கனகராஜ், எஸ்.சத்தியமூர்த்தி, ஏ.சிவசுப்பிரமணியம், எஸ்.ராமராஜ், எஸ்.பரமேஸ்வரன், எஸ்.சிவானந்தன், எம்.பிரேம்குமார், எம்.லலித்குமார், எஸ்.சிவரூபன், ஆர்.சண்முகபிள்ளை, கிருஷ்ணமூர்த்தி, எஸ்.தேவேந்திரன், ஆர்.சத்தியமூர்த்தி, கே.சுரேந்திரகுமார், டீ.சிவகுமார், எஸ்.விக்னேஸ்வரன் (விஸ்வா), மகேஸ்வரன் மற்றும் தொண்டு நிறுவனமான LEDs Foundation அமைப்பின் பிரதிநிதிகளும் உறுப்பினர்களும் இக்கல்லூரியின் முன்னாள் அதிபர்களான எஸ். மயில்வாகனம், திருமதி கோகிலேஸ்வரி ராமகுமார் மற்றும் இக்கல்லூரியின் அதிபர் ஆர்.எஸ்.ரவிச்சந்திரன், பிரதி அதிபர் எஸ்.சந்திரமோகன், துணை அதிபர் எஸ்.மணிராஜ் உட்பட இக்கல்லூரியின் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர். பழைய மாணவர் சங்க செயலாளர் கே.சிவசந்திரன், பொருளாளர் எஸ்.சிவரூபன், பிரதி தலைவர் எஸ்.ரமேந்திரன், துணைச் செயலாளர் எம். கனகேந்திரன், துணைப் பொருளாளர் எஸ். ராமசந்திரன் உட்பட அனைத்து செயற்குழு உறுப்பினர்களும் கல்லூரியின் அபிவிருத்திச் சங்க செயலாளர் சற்குணராஜா மற்றும் சங்கத்தின் பிரதிநிதிகளும் பழைய மாணவர்களும் நலன் விரும்பிகளும் கலந்து கொண்டனர்.

**படங்கள்:** *கண்டி இரா.அ.இராமன்*

# சனல் - 4 தகவல்களை வெளிக்கொணர சர்வதேச விசாரணை அவசியம்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் தெரிவிப்பு

புளியந்தீவு செய்தியாளர்

குற்றச்சாட்டுகளை முன்வைப்பதாயின் உறுதிப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் அவசியம். உயிர்த்த ஞாயிறு தின சம்பவம் குறித்து சனல்-4 பல தகவல்களை வெளிக்கொணர்ந்திருக்கிறது. அதனை ஆவணப்படுத்த சர்வதேச விசாரணை தேவையென முன்னாள பாராளுமன்ற உறுப்பினர் ஜி.ஸ்ரீநேசன் தெரிவித்தார்

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில், விசாரணைக்குழுக் களைப் பொறுத்தவரை நாம் உள்நாட்டுப் பொறிமுறைகளில் ஒருபோதும் நம்பிக்கை கொள்ள முடியாது.இவை தொடர்பாக ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளர் சர்வதேச விசாரணைதான் இறுதியும் அறுதியுமான முடிவு என்கிறார். இதைவிட வேறென்ன வேண்டும்? பிள்ளையான், கோட்டாபய, சஹ்ரான், அசாத் மௌலானா ஆகியோரின் திட்டங்களையும் அதன் உச்ச எல்லைகளையும் கண்டறிய வேண்டும். ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர்,பிள்ளையான், நிதி அமைச்சர் மற்றும் சம்பந்தன் ஆகியோர் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த விடயம் ரணிலின் தலைக்கு அப்பால் போய்விட்டது. கோட்டாபயவை அவரால் காப்பாற்றவே முடியாது. ஆனால், சிங்கள மக்கள் மயங்கிவிடக் கூடாது.

இவ்விடயத்தில் ஜனாதிபதி ரணில் இன்னுமின்னும் தாமதம் காட்டக் கூடாது. அவரது சர்வதேச விசாரணைக்கான கோரிக்கை ஐ.நாவைச் சென்றடைய வேண்டும். இல்லாவிட்டால் சர்வதேசம் அவரை புறம் தள்ளும். இதில் ஐயமில்லை. ஆதலால் சர்வதேச விசாரணை அவசியம் என்றார்.

# பல்கலை மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள் வன்முறைக்கு தோற்றுவாயாக அமையக்கூடாது

## பி ரூ பி அமைப்பின் இணைத்தலைவர் சீலன் கோரிக்கை

புளியந்தீவு செய்தியாளர்



பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள் அறவழிப் போராட்டமாகவே அமையவேண்டும். மாறாக, போராட்டங்கள் வன்முறைக்கு தோற்றுவாயாக அமைந்துவிடக் கூடாதென பி ரூ பி அமைப்பின் இணைத் தலைவர் சீலன் கோரிக்கை விடுத்தார்.

வடக்கு, கிழக்கு பல்கலைக்கழகங்களின் தமிழ் மாணவர்கள், மறைந்த தியாகி திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்திகள், ஏனைய வாகனங்கள், அதனோடு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணிகள் மற்றும் தொண்டர்கள் ஆகியோர் திருமலையில் பாலம்போட்ட ஆற்றுக்கு அருகாமையில் ஏவிவிடப்பட்ட குண்டர்களால் தாக்கப்பட்டமைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. அதுபற்றி ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், மறைந்த தியாகி திலீபன் அரசின் அடக்கு முறைக்கு எதிராகவும் அந்நிய நாட்டினது ஊடுருவலுக்கு எதிராகவும் அஹிம்சாவழியில் போராடி உயிர்நீத்தவர். அதனை குண்டர்கள் அறிவார்களா?

இந்த நாட்டில் நீதி, சட்டம் ஒழுங்கு எதுவுமே இல்லை. இதற்கு மாறாக, குண்டர்களின் தாக்குதல்களும் காவியுடை தரித்தவர்களின் அடாவடித்தனங்களும் நீதியை நிலை நாட்ட வேண்டிய பொலிஸாரினதும் பாதுகாப்புப் படையினரதும் கண்மூடித்தனமும் அரங்கேறி வருவதோடு நீதிமன்றக் கட்டளைகளும் ஓரங்கட்டப்பட்டுக் கிடக்கின்றன. இதற்கு மேலாக அரச புலனாய்வுத் துறையினரால் இனங்களுக்கிடையே முரண்பாடு தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் நாட்டைச் சீரழித்து குட்டிச்சுவராக்கிவிடும். எது எப்படியிருப்பினும், பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள் அஹிம்சை வழியில் மாத்திரமே அமைய வேண்டும். அப்போராட்டங்கள் வன்முறைக்கு தோற்றுவாயாக அமைந்துவிடக் கூடாது என்றும் கூறினார்.

# பாதுகாப்பின்றி வருடாந்தம் ஒரு மில்லியன் நோயாளர்கள் மரணம்

## இந்நிலைமை ஆபத்தானது என்கிறார் வைத்திய அத்தியட்சகர் றஜாப்



அட்டாளைச்சேனை செய்தியாளர்

நோயாளர் பாதுகாப்பின்றி சுமார் ஒரு மில்லியன் பேர் ஒவ்வொரு வருடமும் மரணிக்கின்றனர். இந்நிலைமை மிக ஆபத்தானது. இதனைக் கட்டுப்படுத்துவதற்காக உலகரங்கில் பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ரீ.எஸ்.ஆர்.றஜாப் தெரிவித்தார்.

உலக நோயாளர் பாதுகாப்புத்தினத்தையொட்டி அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (18) மாலை இடம்பெற்ற விஷேட நிகழ்வுக்கு தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது நோயாளர் பாதுகாப்புத்தினம் வைத்தியசாலைகளில் அனுஷ்டிக்கப்படுவதற்கான அவசியம் தொடர்பில் வைத்தியசாலையின் திட்டமிடல் பிரிவுப் பொறுப்பு வைத்தியதிகாரி எம்.எம்.தாசீம் விளக்கமளித்தார்.

வைத்திய அத்தியட்சகர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், நோயாளர் பாதுகாப்பின்றி சுமார் ஒரு மில்லியன் பேர் வருடாந்தம் மரணிக்கின்றனர். இந்நிலைமை மிக ஆபத்தானது. இதனைக் கட்டுப்படுத்துவதற்காக உலகரங்கில் பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதல்களுக்கமைவாக, நோயாளர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

நோயாளர் பாதுகாப்பு என்பது மிக முக்கியமான விடயம். இதற்கென மிக முக்கிய ஆறு விடயப் பரப்புகள் ஊடாக எமது வைத்தியசாலையிலுள்ள ஆளணியினருக்கு விஷேட பயிற்சிகளை வழங்கி செயற்பட்டு வருகின்றோம். எமது சேவைகள் சிறந்த முறையில் உள்ளமையினால் சுகாதார அமைச்சின் மூலம் எமது வைத்தியசாலைக்கு இம்முறை விஷேட விருது வழங்கப்பட்டுள்ளது.

நோயாளர் பாதுகாப்புத் தொடர்பில் மிகுந்த கரிசனையுடன் எமது வைத்தியசாலை செயற்படுவதற்கென நாம் பல்வேறு திட்டங்களையும் விழிப்புணர்வு வேலைத் திட்டங்களையும் வைத்தியசாலையிலும் சமூக மட்டத்திலும் நடைமுறைப்படுத்தி கூட்டுப் பொறுப்புடன் மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்க எத்தனிக்கின்றோம் என்றார்.

இந்நிகழ்வில் விஷேட வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலை ஆளணியினர், நோயாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# வாகன விபத்து: இருவர் படுகாயம்



அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை, பன்குளம் பகுதியில் கெப் ரக வாகனம் பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளதாக மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் (18) காலை 6.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த இருவரும் கெப் ரக வாகனத்தில் காரைதீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுள்ளனர். இதன்போது சாரதிக்கு ஏற்பட்ட தூக்கம் காரணமாக வாகனம் பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இவ்விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சந்திவெளியில் வாகன விபத்து: இருவர் பலி; ஒருவர் படுகாயம்



வாழைச்சேனை மேலதிக,ஏறாவூர், மீராவோடை, கிரான் செய்தியாளர்கள்

மட்டக்களப்பு - சந்திவெளி பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் (18) திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் காத்தான்குடியைச் சேர்ந்த 54 வயதுடைய முஹம்மட் இப்றாகிம் முஹம்மட் ஹுசைன், அவரது 4 வயது பேரப்பிள்ளையான முஹம்மட் நுபைல் ஹிபா செரீன் ஆகியோரே ஸ்தலத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவரே வாகனத்தைச் செலுத்திச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் மனைவி (49 வயது) படுகாயமடைந்த நிலையில், சந்திவெளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

காத்தான்குடியிலிருந்து 3 பேருடன் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்ற வேன் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மரத்துடன் மோதியே மேற்குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

குறித்த சம்பவம் இடம்பெற்றவேளை பிரதேசத்தில் கடும்மழை பெய்துள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, சவூதி அரேபியாவில் குடும்பத்துடன் வசித்து வரும் தமது மகளை வீட்டுக்கு அழைத்து வருவதற்காக பேத்தியுடன் சென்ற வேளையிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.இச்சம்பவம் பிரதேச மக்களிடையே ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.குறித்த சந்திவெளி -கொழும்பு பிரதான வீதியில் அடிக்கடி வீதி விபத்துகள் இடம்பெறுவது தொடர்கதையாகவுள்ளது.குறித்த விபத்து தொடர்பாக சந்திவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சாய்ந்தமருது மழ்ஹறுஸ் ஸம்ஸ் மகா வித்தியாலய மாணவர்கள் கௌரவிப்பு



பொத்துவில் செய்தியாளர்

சாய்ந்தமருது மழ்ஹறுஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்கு தகதி பெற்றுள்ள மாணவிகள், வலய மட்ட தமிழ் மொழித் தினப் போட்டி மற்றும் கோட்ட மட்ட சிறுவர் விளையாட்டுப் போட்டி என்பவற்றில் வெற்றிபெற்ற மாணவர்கள் நேற்றுமுன்தினம் (18) பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் எம்.சீ.என்.றிப்கா தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம்.றிபாஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு குறித்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவித்தார். இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான எஸ்.முபாரக், எம்.எவ்.ஐ.மர்சூனா உள்ளிட்ட ஆசிரியர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கச்சக்கொடி சுவாமிமலை ஆலய வைரவர் திருச்சடங்கு

பாண்டிருப்பு நிருபர்

மட்டக்களப்பு, கச்சக்கொடி சுவாமிமலை ஸ்ரீநாகர்மலை நரசிங்க வைரவர் ஆலய திருச்சடங்கு நாளை மறுதினம் (22) ஆரம்பமாகி 25 ஆம் திகதி நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறவுள்ளது.

ஆலய பிரதம குருமார்களான சிவஸ்ரீ ஏ.கு.தேவராசா குருக்கள், சிவஸ்ரீ தேவ சுகிர்தராஜ் குருக்கள் ஆகியோரின் இணைத்தலைமையில் ஆலய திருச்சடங்கு வழிபாடுகள் நடைபெறவுள்ளன. 22 ஆம் திகதி இரவு திருக்கும்பம் வைத்தல், மகரதோரணம், சடங்கு பூசைகள் நடைபெறும். 24 ஆம் திகதி இரவு 12 மணிக்கு விநாயகப் பானை எழுந்தருளப் பண்ணல் சடங்கு நடைபெறும். 25 ஆம் திகதி அதிகாலை தீர்த்தோற்சவம், சர்க்கரை அமுது ஆகியவற்றுடன் திருச்சடங்கு நிறைவுபெறவுள்ளது.

# போடியார் புலம்பல்!



**பிள்ளையான் சொன்ன குற்றச்சாட்டுகள விசாரிக்கோணும் எண்டு காத்தான்குடி பள்ளிவாசல் சம்மேளனம் சொல்லிப்போட்டாங்க எலுவா...?**

**இஷ்லாமிய பயங்கரவாத ஆக்கள் இன்னும் காத்தான்குடிக்க இருக்காங்க எண்டு அந்த கொட்டப்பாக்கான் பிள்ளையான் வாய் தப்பி சொன்னதாலதான் இத விசாரிங்க வாப்பா எண்டு அந்த பள்ளிவாசல் சம்மேளனத்து ஆக்கள் செல்லித்தாங்க...**

**புள்ளயான் 2008 இல முதலமைச்சர் பதவி எடுத்த ஒடனே காத்தான்குடி பெரிய பள்ளிவாசலில கூட்டிப்போய் ஆலத்தி எடுத்ததும் இந்த சம்மேளனந்தாம் எண்டத மறக்கலாமா ஹாஜியார் ....!**

# சாய்ந்தமருது பிரதேச கடலரிப்பை கட்டுப்படுத்த துரித நடவடிக்கை

## கொழும்பில் உயர்மட்டக் கலந்துரையாடல்

நூருல் ஹுதா உமர், பாறுக் ஷிஹான், எஸ்.அஷ்ரப்கான்



சாய்ந்தமருது பிரதேசத்தில் கடந்த சில வாரங்களாகத் தீவிரமடைந்துள்ள கடலரிப்பினால் மீனவ வாடிகள், பள்ளிவாசல், பூங்காக்கள் என்பன பாதிக்கப்பட்டுள்ளதுடன் மீன்பிடி நடவடிக்கையும் ஸ்தம்பித்துள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும் உயர் மட்டப் பிரமுகர்கள், அதிகாரிகள் ஆகியோருக்குமிடையிலான கலந்துரையாடல் திங்கட்கிழமை மாலை சாய்ந்தமருது அல்- ஹசனாத் பள்ளிவாசலில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச மீனவர்களின் பிரச்சினைகளை நேற்றுமுன்தினம் காலை கள விஜயம் மேற்கொண்டு கேட்டறிந்த முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம். ஹரீஸ் கடலரிப்பைக் கட்டுப்படுத்த மேலதிக நடவடிக்கை எடுக்கும் வகையில் சாய்ந்தமருது பிரதேச செயலாளருக்கு முன்வைத்த பணிப்புரைக்கமைவாக ஒருங்கமைக்கப்பட்டு நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கரையோரம் பேணல் திணைக்கள கிழக்கு மாகாண பொறியியலாளர் எம். துளசிதாசன் கலந்து கொண்டு கரையோரம் பேணல் திணைக்களம் இவ் விடயம் தொடர்பில் இதுவரை முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் விளக்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கலாநிதி ஏ.எம். ஜமீல், சாய்ந்தமருது முன்னாள் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம். சலீம், கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினர் யூ.எல்.என். ஹுதா உமர், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எச். நிஷார்தீன், கரையோரம் பேணல் திணைக்கள சாய்ந்தமருது பிரதேச அதிகாரிகள், சாய்ந்தமருது பிரதேச செயலக அதிகாரிகள், சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி அமைப்பின் நிர்வாகிகள், மீனவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது துரிதகதியில் இப்பணியை முன்னெடுக்கத் தேவையான விடயங்கள் தொடர்பில் சபையோரால் ஆழமாக ஆராயப்பட்டதுடன், இப்பணியை முன்னெடுக்கத் தேவையான நிதியைப் பெறுவது தொடர்பிலும் திட்டவரைபை வரைவது தொடர்பிலும் கலந்துரையாடி நிலையான தீர்மானங்களை எடுக்கத் தேவையான நடவடிக்கையை பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அரச உயர்மட்டங்களைத் தொடர்பு கொண்டு எடுத்தார். இந்தப் பிரச்சினைக்கு ஒரு குழுவாக இணைந்து செயற்பட்டு தீர்வைக் காண இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பான அரச உயர்மட்ட சந்திப்பொன்று பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸின் ஏற்பாட்டில் இன்று கொழும்பில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை கல்வித்துறை ஊக்குவிப்புக்கு ஆதரவு

## ◆ ஜனாதிபதியிடம் அஜய் பங்கா உத்தரவாதம்
## ◆ ஒக்டோபர் மாத இறுதியில் உலக வங்கியின் பிரதிநிதி நாட்டுக்கு விஜயம்




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான பொருளாதார மற்றும் சமூக மறுசீரமைப்பு வேலைத் திட்டங்களை வெகுவாகப் பாராட்டிய உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா (Ajay Banga) இலங்கையின் புத்தாக்க பாதைக்கான பிரவேசம் மகிழ்ச்சியளிப்பதாக தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆரம்பித்துள்ள இந்த செயற்றிட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்றால் இலங்கை எதிர்பார்க்கும் இலக்குகளை விரைவாக அடைய முடியுமென நம்பிக்கை தெரிவித்துள்ள உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா, அந்த முயற்சிகளுக்கு உலக வங்கியின் முழுமையான ஒத்துழைப்பு கிட்டும் என்றும் உறுதியளித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 78ஆவது அமர்வில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் உலக வங்கியின் தலைவர் அஜய் பங்காவுக்கும் இடையில் நேற்று முன்தினம் (18) நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் இடம்பெற்றது. இந்த விசேட சந்திப்பின்போதே உலக வங்கித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களில் இலங்கை எதிர்கொண்ட கடுமையான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உலக வங்கி வழங்கிய ஆதரவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உலக வங்கியின் தலைவருக்கு நன்றி தெரிவித்தார்.

இதுகுறித்து ஜனாதிபதி தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை முழுமையான பொருளாதார மறுசீரமைப்புப் பாதையில் பிரவேசித்துள்ளது. இலங்கையின் கடன் நீடிப்பு வேலைத்திட்டம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

அடுத்த தசாப்தத்தில் அதிக பொருளாதார வளர்ச்சி விகிதத்துடன் நாட்டை முழுமையாக இயல்பு நிலைக்கு திரும்ப எதிர்பார்த்துள்ளோம். அதற்காக சர்வதேச நாணய நிதியத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பொருளாதார மறுசீரமைப்புகளை முழுமையாக அமுல்படுத்த எதிர்பார்த்திருப்பதாகவும் கடந்த காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியானது இலங்கைக்கு அபிவிருத்திக்கு பொன்னான கதவுகளை திறந்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க சுற்றுலா, தொழில் மற்றும் உணவுப் பாதுகாப்பு, விவசாய நவீனமயமாக்கல் துறைகளுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்டக் கம்பனிகளுடன் இணைந்து பாரம்பரிய ஏற்றுமதி பயிர்களுடன் இலங்கையின் விவசாயத்துறையின் நவீனமயமாக்கல் செயல்முறையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இந்திய - இலங்கை தொழில்நுட்ப ஒத்துழைப்பின் பலனாக, 4 புதிய தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்கவும் அதற்கு மேலதிகமாக காலநிலை மாற்றம் குறித்த சர்வதேச பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கும் அவசியமான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உத்தேச காலநிலை மாற்றம் குறித்த சர்வதேச பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு உலக வங்கியின் தொழில்நுட்ப உதவிகளை எதிர்பார்த்துள்ளோம்.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையினூடாக இலங்கையின் அபிவிருத்தியை ஏற்படுத்த எதிர்பார்ப்பதாகவும் வட மாகாணம் துரிதமாக அபிவிருத்தி அடைந்துவரும் நிலையில், காற்றாலை மற்றும் சூரிய சக்தி மூலமான மின்உற்பத்தி என்பவற்றை ஊக்குவித்து வருகிறோம்.

பசுமை ஹைட்ரஜன் மற்றும் அமோனியாவைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாலின சமத்துவம், பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தல், மகளிர் ஆணைக்குழு உருவாக்கம் மற்றும் பெண்கள் ஆய்வுக்கான நிறுவனத்தை நிறுவுதல் உள்ளிட்ட விடயங்களுக்காக 4 புதிய சட்டமூலங்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளோம் என்றார்.

இதேவேளை, இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை உலக வங்கியின் தலைவர் ஏற்றுக்கொண்டார்.

தேவையான ஆலோசனை சேவைகளுக்காகவும் தொழில்நுட்ப உதவிகளுக்கும் அவசியமான நேரங்களில் தம்மை அல்லது சர்வதேச நடவடிக்கைகளுக்கான தலைவரை தொடர்பு கொள்ளுமாறு அறிவித்த உலக வங்கியின் தலைவர், ஒக்டோபர் மாத இறுதியில் சர்வதேச நடவடிக்கைகளுக்கான தலைவர் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

சுற்றுலாத்துறைக்கு முன்னுரிமையளித்து பொருளாதாரச் மறுசீரமைப்புக்காக மேற்கொண்டுள்ள அணுகுமுறையானது சாதகமானது. தற்போதைய நிலைமையில் இலங்கைக்கு அதுவே மிகவும் பொருத்தமானது.

உலக கப்பல் பாதையின் மத்தியஸ்தமாக விளங்கும் இலங்கையின் புவியியல் அமைவிடம் தனித்துவமானது. அதனால் பொருளாதார அனுகூலங்களைப் பெறுவதற்கு துறைமுக வர்த்தகம் மற்றும் கடல்சார் நடவடிக்கைகளையும் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

இலங்கையின் டிஜிட்டல் மயமாக்கல், காற்றாலை சூரிய சக்தி மற்றும் கல்வித்துறை உட்பட புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறைக்கு உலக வங்கி ஆதரவளிக்கும்.

அத்தோடு இலங்கை உட்பட தெற்காசிய நாடுகளில் தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் செயற்படுத்தப்பட்டு வருகின்ற வலயத்தை இணைக்கும் "உள்ளக வலுசக்தி கட்டமைப்பில் இணைந்துகொள்ள உலக வங்கி விருப்பத்துடன் செயற்படுகிறோம்.

மேலும் அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்களை டிஜிட்டல் மயமாக்கும் வேலைத்திட்டங்கள் வெளிப்படைத்தன்மை மிக்கதாக திறம்பட முன்னெடுக்க வேண்டும்.

அந்த மாற்றங்களை செய்யும்போது, ஆசிரியர்கள் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் தடையேற்படுத்த முற்படலாம்.

அதற்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாணவர்களின் எதிர்காலமே தனக்கு முக்கியம் என்றும் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை ஊக்குவிப்பதே தனது நோக்கம் எனவும் சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஐக்கிய அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்க, ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மொஹான் சமரநாயக்க உள்ளிட்டவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நேர்மாறாக நடைமுறைப்படுத்தும் நிலைமை

## வெரிட்டே ரிசர்ச் ஆய்வில் தகவல்

VERITÉ RESEARCH
Strategic Analysis for Asia

உட்கட்டமைப்பு கருத்திட்டக் கண்காணிப்பான் எனும் ஒன்லைன் டாஷ்போர்டின் முதலாவது கட்டத்தை வெரிட்டே ரிசர்ச் மும்மொழியில் 2022ஆம் ஆண்டு தொடங்கியது. தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு ட்ரில்லியனுக்கும் அதிகமான பெறுமதியுள்ள 60 பாரிய உட்கட்டமைப்புக் கருத்திட்டங்கள் தொடர்பில் முன்கூட்டியே தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதை இந்த டாஷ்போர்ட் கண்காணிக்கிறது. அதன் 2023ஆம் ஆண்டுக்கான புதிய இற்றைப்படுத்தல்கள் தற்போது பதிவேற்றப்பட்டுள்ளன.

ஊழல், கொள்முதல் முறைகேடுகள், உட்கட்டமைப்பு மீதான தேவையற்ற அதிக ஒதுக்கீடுகள் போன்ற எதிர்மறையான குற்றச்சாட்டுகளில் இலங்கையின் பாரிய அளவிலான உட்கட்டமைப்புத் திட்டங்கள் மூழ்கியுள்ளன.

இலங்கையின் கடன் சுமை கடந்த இரண்டு தசாப்தங்களில் கணிசமாக அதிகரிப்பதற்கு, இவ்வாறான திட்டங்களுக்கு நிதியளித்தமையும் அது தொடர்பான வெளிப்படைத் தன்மையின்மையும் முக்கிய காரணங்களாகும்.

2016இல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் (RTI) முக்கிய அரசாங்கத் தகவல்களுக்கு பொதுவான அணுகலை இலகுபடுத்துவதன்மூலம் இதை மாற்ற முயற்சித்ததோடு அரசாங்கத்தை பொறுப்பேற்க பொதுமக்களுக்கு அதிகாரமும் அளித்தது. குறித்த சட்டத்தின் பிரிவு 9, ஐந்து பரந்த தொகுதிகளின் கீழ், ஒரு அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் பாரிய உட்கட்டமைப்பு திட்டங்கள் தொடர்பான தகவல்களை வெளியிடுவதற்கு அவ் உட்கட்டமைப்பு திட்டத்துக்கு பொறுப்பான அமைச்சரை கட்டாயப்படுத்துகிறது.

2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் 60 பாரிய அளவிலான உள்கட்டமைப்பு திட்டங்கள் தொடர்பாக ஒன்லைனில் தகவல்களை முன்கூட்டியே வெளிப்படுத்துவதை டாஷ்போர்டு கண்காணித்தது. 2022ஆம் ஆண்டின் 60 திட்டங்களுக்கான மதிப்பீட்டுக் காலம் டிசம்பர் 2021 - மார்ச் 2022 ஆகவும், 2023 இன் 60 திட்டங்களுக்கு ஜனவரி - ஏப்ரல் 2023 ஆகவும் இருந்தது. பொறுப்பான அமைச்சுக்கள் மற்றும் முகவர்களின் இணையதளங்களில் தகவல்களை முன்கூட்டியே வெளிப்படுத்துவது மட்டுமே மதிப்பீட்டில் கருதப்பட்டது.

2022ஆம் ஆண்டில், ரூபா 1.08 ட்ரில்லியன் மதிப்புள்ள 60 திட்டங்களின் 18சதவீதமான தகவல்கள் மட்டுமே ஒன்லைனில் முன்கூட்டியே வெளியிடப்பட்டன. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு தகவல் அளிக்க வேண்டிய கட்டாயம் இருந்தபோதிலும், உட்கட்டமைப்பு திட்டங்கள் குறித்து அரசாங்கம் பொதுமக்களை தொடர்ந்தும் இருட்டில் வைத்திருப்பதை இது தெளிவுபடுத்துகிறது.

மேலும் 2023ஆம் ஆண்டில், 2019 - 2022க்கு இடையில் இலங்கை அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட 60 திட்டங்களின் 25 சதவீதமான தகவல்கள் மட்டுமே ஒன்லைனில் முன்கூட்டியே வெளியிடப்பட்டுள்ளன. கண்காணிக்கப்பட்ட திட்டங்களின் மொத்த மதிப்பு 2.54 ட்ரில்லியன் ரூபாவாகும்.

இவ்வாறு குறைவான அளவில் தகவல் வெளியிடப்பட்டிருக்கும் அதேவேளை, இலங்கையில் பெரும்பான்மையினரால் பேசப்படும் இரண்டு மொழிகளான சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் பெரும்பாலான தகவல்கள் கிடைக்கப்பெறாமை மேலும் ஒரு கவலைக்குரிய விடயமாகும். உண்மையில், தகவல் அறியும் உரிமைச் சட்டம் சிங்களம் மற்றும் தமிழில் தகவல்களை வெளியிடுவதை கட்டாயப்படுத்துவதோடு, சாத்தியமானால் மட்டுமே ஆங்கிலம் பயன்படுத்தப்பட வேண்டும் என குறிப்பிடுகிறது. இருப்பினும், நடைமுறையில், அதிகாரிகள் அதற்கு நேர்மாறாகச் செய்வதாகவே தெரிகிறது.

# பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன கடமை பொறுப்பேற்பு



பாராளுமன்றத்தின் புதிய பதவியணிப் பிரதானி மற்றும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமாக ஜீ.கே.ஏ.சமிந்த குலரத்ன தனது கடமைகளை அண்மையில் பொறுப்பேற்றுக் கொண்டார். பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்ததைத் தொடர்ந்து அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

புதிய பதவியணிப் பிரதானி மற்றும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமாக சிரேஷ்ட சட்டத்தரணி ஜீ.கே.ஏ.சமிந்த குலரத்ன, 2023 செப்டெம்பர் 15ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டிருப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (19) பாராளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

சமிந்த குலரத்ன, ருவன்வல்ல ராஜசிங்ஹ மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் என்பதுடன், திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டமாணிப் பட்டதாரியாவார். அத்துடன், அவர் கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் பக்கிம்ஹாம்ஷெயர் பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமாதாரியாவார். 2005ஆம் ஆண்டு முதல் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினரும் 2016ஆம் ஆண்டு முதல் சட்டத்தரணிகள் கவுன்சிலின் உறுப்பினருமாவார்.

சிரேஷ்ட சட்டத்தரணியான சமிந்த குரலத்ன, பாராளுமன்றத்தின் ஆளுங்கட்சியின் முதற்கோலாசானின் செயலாளர், ஜனாதிபதியின் மேலதிக செயலாளர், பிரதமரின் மேலதிக செயலாளர், எதிர்க்கட்சித் தலைவரின் மேலதிக செயலாளர், லண்டனில் உள்ள ஐக்கிய இராச்சியத்துக்கான இலங்கை உயர்ஸ்தானிகரகத்தின் அமைச்சு ஆலோசகர், ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர், ஜனாதிபதியின் உதவிச் செயலாளர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளில் 20 வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றியுள்ளார். இவர் அரசியலமைப்பு சட்டம், பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் நடைமுறைகள் பற்றியும் அரசாங்க நிர்வாகம் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் அனுபவம் உள்ள சிரேஷ்ட அதிகாரியாவார்.

ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சீனா, இந்தோனேசியா மற்றும் ஜப்பான் உட்பட பல நாடுகளில் நடைபெற்ற சர்வதேச மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளில் இவர் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.

இலங்கை வங்கி, மேர்ச்சன்ட் வங்கி, MBSL காப்புறுதி நிறுவனம், கிரான்ட் ஓரியன்டல் ஹோட்டல் (GOH), வரையறுக்கப்பட்ட மகநெகும எமியூல்சன் பிரைவட் லிமிட்ட், Colombo Financial City Foundering Ltd உள்ளிட்ட அரசாங்க நிறுவனங்கள் பலவற்றிலும் பணிப்பாளர் சபையில் பணியாற்றியுள்ளார்.

மேலும், குலரத்ன லண்டனில் உள்ள ஐக்கிய இராச்சியத்துக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் அமைச்சு ஆலோசகராகக் கடமையாற்றிய காலத்தில் தூதரக அதிகாரிகளின் பழைமை வாய்ந்த சங்கமான கென்சியூலர் அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்று சபையைப் பிரதிநிதித்துவப்படுத்திய முதலாவது தெற்காசிய இராஜதந்திரியாகவும் விளங்குகின்றார்.

# மேர்வின் சில்வாவுக்கு எதிராக பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் முறைப்பாடு

■ பு.கஜிந்தன்



விகாரைகள் மீதும் பிக்குகள் மீதும் கை வைத்தால், கை வைப்பவர்களது தலையை எடுத்து களனிக்கு கொண்டு செல்வதாக, களனியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்திருந்தார்.

அவரது இந்த கருத்துக்கு பலரும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்த நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் வட்டுக்கோட்டை மற்றும் ஊர்காவற்றுறை தொகுதி அமைப்பாளர் முருகவேல் சதாசிவம், மேர்வின் சில்வாவின் கருத்துக்கு எதிராக அண்மையில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார்.

அந்த முறைப்பாட்டுக்கு வட்டுக்கோட்டை பொலிஸார் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்காத நிலையில் முருகவேல் சதாசிவம் கொழும்பில் உள்ள இலங்கை பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் இது குறித்து முறைப்பாடு பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சித்திரப் போட்டியில் ஸாறாவுக்கு முதலாமிடம்

■ எம்.எல்.எஸ்.முஹம்மத்

"சர்வஜன வாக்குரிமையை பாதுகாப்போம்" என்ற தொனிப்பொருளின் கீழ் இரத்தினபுரி தேர்தல் அலுவலகம் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்திய சித்திரப் போட்டியில் எஹலியகொடை அல்-அக்ஸா கல்லூரியின் இடைநிலைப் பிரிவு மாணவி ஆர்.ஏ.ஸாறா முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

மேற்படி மாணவியின் வெற்றி குறித்து கல்லூரியின் அதிபர் எப்.எம்.காஸிம் மற்றும் ஆசிரியர்கள் உட்பட பாடசாலை சமூக உறுப்பினர்கள் அனைவரும் தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.



# துப்பாக்கி – தோட்டாக்களுடன் மதவாச்சியில் நபரொருவர் கைது

■ அநுராதபுரம் நிருபர்

அனுமதியின்றி சட்டவிரோதமான முறையில், வெளிநாட்டில் தயாரித்த துப்பாக்கியொன்று மற்றும் அதற்கு பயன்படுத்தும் தோட்டாக்கள் நான்கை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் மதவாச்சி, பிஹிம்பியகொள்ளாவ பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய, நேற்று முன்தினம் (18) மதவாச்சி பிஹிம்பியகொள்ளாவ பொலிஸ்பிரிவின் 10ஆவது மைல்கல் பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மதவாச்சி, பிஹிம்பியகொள்ளாவ பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் துப்பாக்கியை பயன்படுத்தி சட்டவிரோத குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளாரா என்பதை அறிந்துகொள்வதற்காக பிஹிம்பியகொள்ளாவ பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் மதவாச்சி நீதவான் நீதிமன்றில்ஆஜர்படுத்தப்படவுள்ளார்.




மேல் மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் நடத்தப்படும் தந்தை செல்வா அறநெறி பாடசாலைகளுக்கான மாணவ முதல்வர்களை தெரிவு செய்யும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட விவேகானந்தா சபையின் ஊடக பொறுப்பாளர் தயாநிதி மாணவர்களுக்கு சின்னங்களை அணிவிப்பதையும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# இந்தியா - கனடா உறவில் விரிசல்

## கனடாவில் காலிஸ்தான் தலைவர் கொலை விவகாரம்: இந்தியாவுக்குத் தொடர்பு; பிரதமர் ட்ரூடோ குற்றச்சாட்டு



## 05 நாட்களுக்குள் நாட்டைவிட்டு வெளியேறுமாறு கனேடியத் தூதுவருக்கு இந்தியா உத்தரவு



இந்தியாவுக்கான கனேடியத் தூதரக அதிகாரியை 05 நாட்களுக்குள் நாட்டைவிட்டு வெளியேறும்படி இந்திய வெளியுறவு அமைச்சகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கனடாவில் காலிஸ்தான் பிரிவினைவாத தலைவர் ஹர்தீப்சிங் நிஜார் கொலையில் இந்தியாவுக்குத் தொடர்பு இருப்பதாக குற்றம் சாட்டியுள்ள அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இதன் பின்னணியில் இருந்ததாக கூறப்படும் இந்திய அரசு உயர் அதிகாரியொருவரை நாட்டை விட்டு வெளியேற உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக கனேடிய வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி விடுத்த அறிக்கையில்,

''கனடா மண்ணில் கனடா குடியுரிமைப் பெற்றவரைக் கொலை செய்ததை ஏற்க முடியாது. கனடாவின் இறையாண்மை விதிகள் மீறப்பட்டுள்ளன. இது தொடர்பாக இந்தியப் பிரதமர் மோடி, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உள்ளிட்டோருக்கு முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கனேடியத் தூதுவரை நாட்டைவிட்டு வெளியேறும்படி உத்தரவு**

இந்தியத் தூதரக அதிகாரியை கனடா வெளியேறும்படி உத்தரவிட்டுள்ள நிலையில், அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியாவுக்கான கனேடிய தூதரக அதிகாரியை 05 நாட்களுக்குள் நாட்டைவிட்டு வெளியேறும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கான கனேடிய துணை தூதுவரை அழைத்த வெளியுறவு அமைச்சகம், இந்தியாவிலுள்ள கனேடியத் தூதுவரை வெளியேற்றும் முடிவைப் பகிர்ந்துள்ளது.

**சர்ச்சையின் பின்னணி:**

இந்தியாவில் சீக்கியர்களுக்கு தனி மாநிலம் வேண்டும் என காலிஸ்தான் பயங்கரவாதிகள் வலியுறுத்தி வருகின்றனர். இதனை வலியுறுத்தி கனடாவிலுள்ள காலிஸ்தான் ஆதரவாளர்கள் இந்தியாவுக்கு எதிரான செயல்களில் தொடர்ந்து ஈடுபடுகின்றனர். கனடாவிலுள்ள இந்திய தூதரகம் முன்பு, கடந்த மார்ச் மாதம் அவர்கள் போராட்டம் நடத்தினர்.

காலிஸ்தான் பயங்கரவாதிகளின் செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கனேடிய அரசிடம் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில், கனடாவில் காலிஸ்தான் டைகர் படைப்பிரிவின் தலைவரும் தீவிரவாதியுமான ஹர்தீப் சிங் நிஜார் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலையில் கனடாவிலுள்ள இந்தியத் தூதுவர் சஞ்சய் குமார் வர்மா மற்றும் டொரான்டோவிலுள்ள துணைத் தூதுவர் அபூர்வா வஸ்த்தவா ஆகியோர் முக்கிய பங்காற்றியுள்ளனர் என அவர்களின் போட்டோக்களுடன் கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் போஸ்டர் ஒட்டினர்.

இந்நிலையில் பாராளுமன்றத்தில் பேசிய கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ,

''இந்திய அரசாங்க முகவர்களுக்கும் காலிஸ்தான் தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் கொலைக்கும் தொடர்பு இருப்பதற்கான நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் உள்ளன'' என தெரிவித்தார்.

இதனை இந்தியா அபத்தமானது என்றும் உள்நோக்கம் கொண்டது என்றும் தெரிவித்துள்ளது. இந்தியாவின் மூத்த தூதரக அதிகாரியை கனடா வெளியேற்றிய நிலையில், அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியாவுக்கான கனேடிய தூதுவரை வெளியேறும்படி இந்தியா தெரிவித்துள்ளது.

## லோக்ரேஞ்ச் பொயின்ட்டுக்குள் நுழைந்த ஆதித்யா - எல்1

### ஆதவனை நோக்கிய ஆய்வுப் பயணம் ஆரம்பம்




இஸ்ரோவால் சூரியனை ஆய்வு செய்ய விண்ணில் செலுத்தப்பட்ட ஆதித்யா எல்.1 விண்கலம் இன்று அதிகாலை சூரியன்-பூமி எல்1 பொயின்ட்டுக்குச் செல்லும் பாதையில் செலுத்தப்பட்டுள்ளது.

வெற்றிகரமாக 4 முறை புவிசுற்றுவட்டப் பாதை உயர்த்தப்பட்டு நேற்று முதல் சூரியனை நோக்கி தனது முதல் சுற்றுப் பயணத்தைத் தொடங்கியது. 110 நாட்கள் தொடர்ந்து பயணிக்கும் ஆதித்யா, பூமி-சூரியன் சுற்றுவட்டப்பாதையின் முதல் சுற்றுக்கு உயர்த்தப்படும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

பூமியிலிருந்து, 15 இலட்சம் கிலோ மீற்றர் தூரத்திலுள்ள, 'லோக்ரேஞ்ச் பொயின்ட் எல்1' என்ற இடத்தில் நிறுத்தப்பட்டு, அங்கிருந்தபடி சூரியனை ஆதித்யா விண்கலம் ஆய்வு செய்யும்.

## புயல், வெள்ளத்தால் உருக்குலைந்த லிபியா: மீட்புப் பணிகளில் தாமதம்; போராட்டத்தில் குதித்த மக்கள்





லிபியாவை சூறையாடிய டேனியல் புயல் மற்றும் கடும் மழை வெள்ளத்தில் சிக்கி தங்களது உறவுகளை இழந்தவர்கள் மீட்பு பணியில் தாமதம் ஏற்படுவதாகக் குற்றம்சாட்டி போராட்டத்தில் குதித்துள்ளனர்.

லிபியாவின் டெர்னா நகரை கடந்த 10ஆம் திகதி தாக்கிய டேனியல் புயலால் மிக கனமழை பெய்தது. இதனால் ஏற்பட்ட கடும் வெள்ளத்தால் 02 பெரிய அணைகள் உடைப்பெடுத்தன. இதில் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்த நிலையில், உற்றார், உறவினர்கள் மற்றும் குடும்பத்தினரை இழந்தவர்கள் மீட்புப் பணியில் அரசு சுணக்கம் காட்டுவதாக குற்றம்சாட்டி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பேரழிவில் சிக்கி 11,300பேர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 20 ஆயிரத்துக்கும் அதிகமாக இருக்கும் என டெர்னா நகர மேயர் அச்சம் தெரிவித்துள்ளார். சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேர் வாழும் டெர்னா நகரில் பல ஆயிரம் பேரை அணைகளிலிருந்து வெளியான வெள்ளம் கடலுக்குள் இழுத்துச் சென்றுவிட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட டெர்னா நகரின் பெரும்பாலான பகுதிகள் சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் உருக்குலைந்ததுபோல் காட்சியளிக்கின்றன.

உலக செய்திகள்

## இலங்கை கடற்படைத் தாக்குதல் அச்சம்: மீன்பிடிக்குச் செல்லாத மீனவர்கள்



கிரிக்கெட் போட்டியில் இந்தியா வென்றதால் இலங்கை கடற்படை தாக்குதலில் ஈடுபடலாம் என்ற அச்சத்தில் இராமேஸ்வரம் மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை.

கடந்த 17ஆம் திகதி ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கையை இந்தியா தோற்கடித்து கிண்ணத்தை சுவீகரித்தது.

வெற்றியை இராமேஸ்வரம் மீனவர்கள் கொண்டாடினாலும் மகிழ்ச்சியுடன் மீன்பிடிக்க செல்ல முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் இறுதி போட்டியில் இலங்கையை தோற்கடித்து இந்தியா வென்றது. அன்று இரவு நடுக்கடலில் இராமேஸ்வரம் மீனவர்கள் விக்டஸ், ஜோன்போல், அந்தோணிச்சாமி, மாரிமுத்து ஆகிய 04 பேரை இலங்கை கடற்படையினர் வெட்டிக்கொலை செய்து கடலில் வீசினர். இச்சம்பவம் இராமேஸ்வரம் மீனவர்களிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதுகுறித்து மீனவர் சங்கத் தலைவர் சகாயம் தெரிவிக்கையில்:

2011இல் இதேபோன்று வெற்றிக்குப்பின் நடந்த கொலை சம்பவம் ஆறாத வடுவாகவுள்ளது. அந்த அச்சத்தில் நேற்றுமுன்தினமும் பெரும்பாலான மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. சிறியரக படகுகள் மட்டுமே சென்றன - என்றார்.

## புத்தளம் சாஹிரா பாடசாலை ஆசிரியருக்கு மலேஷியாவில் தங்கப் பதக்கம்




*ரஸீன் ரஸ்மின்*

மலேஷியா கோலாலம்பூரில் நடைபெற்று வருகின்ற 35ஆவது ஏசியன் மாஸ்டர் மெய்வல்லுனர் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்டுள்ள புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் உடற்கல்வி போதனாசிரியர் எம்.எப்.எம்.ஹூமாயூன், உயரம் பாய்தல் போட்டியில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்ற 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டியில் புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியின் சிரேஷ்ட உடற்கல்வி போதனாசிரியர்களான எம்.எப்.எம்.ஹூமாயூன் மற்றும் எம்.எப்.எம். துபைல் ஆகிய இரு சகோதரர்களும் 100 மீற்றர், 200 மீற்றர், உயரம் பாய்தல் ஆகிய போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்று தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்களை பெற்றுக்கொண்டதன் மூலமாகவே இரண்டாம் கட்டமாக மலேஷியா கோலாலம்பூரில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பை பெற்றனர்.

மேலும், புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியின் மற்றுமொரு சிரேஷ்ட உடற்கல்வி போதனாசிரியரான எம்.எப்.எம்.துபைல் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளி பதக்கத்தையும் பெற்றுக்கொண்டார்.

## துடுப்பாட்ட வரிசை ஏழாம் இலக்கம் வரை நீண்டு செல்கிறது; ஆனால், திறமை வெளிப்படாமல் இருப்பது கவலையளிக்கிறது

### இலங்கை பயிற்சியாளர் சில்வர்வூட்



*ஏ. அகீல் சிஹாப்*

ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்திய அணியுடனான இறுதிஆட்டத்தில் இலங்கை அணி படுதோல்வியடைந்தது. இது தொடர்பில் கருத்து தெரிவித்த இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளர் கிறிஸ் சில்வர்வூட்,

இந்தத் தோல்வி உண்மையில் இலங்கை அணியை அதிர்ச்சியடையச் செய்திருக்கக்கூடும். ஆனால், அந்த அதிர்ச்சியானது நீண்ட கால அடிப்படையில் அவர்களை நன்றாக செய்ய தூண்டியுள்ளது. சில சமயங்களில் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு செல்வதற்கு முன்னர் இத்தகைய பேரிடி விழுவது மோசமான ஒன்றல்ல. பெரிய அணிகளுடன் மோதுவதற்கு வீரர்களை விழிப்படையச் செய்யும் ஒரு நிகழ்வாக இது இருக்கலாம்.

வீரர்கள் உடை மாற்றும் அறையில் கற்கவேண்டிய பாடங்கள் இருப்பதுடன் கேட்கவேண்டிய கேள்விகள் இருக்கின்றன. நாங்கள் முன்னோக்கி நகரவேண்டும். அதுதான் இப்போதைய தேவை. எமது துடுப்பாட்ட வரிசை 7ஆம் இலக்கம் வரை நீண்டு செல்கிறது. ஆனால், திறமை வெளிப்படாமல் இருப்பது கவலையளிக்கிறது. இது குறித்து கலந்துரையாட வேண்டும். பிரச்சினைகளை நேருக்கு நேர் எதிர்கொள்ள வேண்டும் என்பதை ஊக்குவிக்கிறேன். மீண்டும் மீண்டும் இவ்வாறு நடைபெறுவதை அனுமதிக்க முடியாது என அவர் தெரிவித்தார்.

## ஒன்றரை ஆண்டுகளின் பின் இந்திய ஒருநாள் அணியில் அஸ்வின்

13ஆவது ஐ.சி.சி. உலகக்கிண்ண தொடர் அடுத்த மாதம் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், அதற்கு முன்னதாக இந்தியாவுடன் ஆஸி. அணி 3 ஒருநாள், 5 டி20 ஆட்டங்களில் மோதுகிறது. குறித்த தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் ஒன்றரை ஆண்டுக்கும் மேலான காலகட்டத்துக்குப் பிறகு ரவிச்சந்திரன் அஸ்வின் ஒருநாள் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். முதலிரு ஆட்டங்களில் கே.எல்.ராகுல் கெப்டனாக செயற்படவுள்ளார்.

உபாதையான அக்ஸர் படேல், வரும் 28ஆம் திகதிக்குள்ளாக முழுமையாக குணமடையாத பட்சத்தில் அவருக்குப் பதிலாக உலகக்கிண்ண அணியில் அஸ்வின் சேர்க்கப்பட வாய்ப்புள்ளது.

எதிர்வரும் 22, 24, 27 ஆகிய திகதிகளில் 3 ஒருநாள் போட்டிகள் நடைபெறவுள்ளன.

**முதலிரண்டு போட்டிகளுக்கான இந்திய அணி :** கே.எல். ராகுல் (கெப்டன்), ரவீந்திர ஜடேஜா (துணை கெப்டன்), ருதுராஜ் கெய்க்வாட், சுப்மன் கில், ஸ்ரேயஷ் ஐயர், சூர்யகுமார் யாதவ், திலக் வர்மா, இஷான் கிஷன், ஷர்துல் தாக்குர், வொஷிங்டன் சுந்தர், ஆர். அஸ்வின், ஜஸ்ப்ரித் பும்ரா, முஹம்மட் ஷமி, முஹம்மட் சிராஜ், பிரசித் கிருஷ்ணா.

**3ஆவது போட்டிக்கான இந்திய அணி:** ரோஹித் சர்மா (கெப்டன்), ஹர்த்திக் பாண்டியா (துணை கெப்டன்), சுப்மன் கில், விராட் கோஹ்லி, ஸ்ரேயஷ் ஐயர், சூர்யகுமார் யாதவ், கே.எல்.ராகுல், இஷான் கிஷன், ரவீந்திர ஜடேஜா, ஷர்துல் தாக்குர், வொஷிங்டன் சுந்தர், குல்தீப் யாதவ், ஜஸ்ப்ரீத் பும்ரா, முஹம்மட் ஷமி, முஹம்மட் சிராஜ், ஆர்.அஸ்வின், அக்ஷர் படேல்




## தேசிய ரீதியில் சம்பியனான அக்கரைப்பற்று அஸ்-ஸிறாஜ் மகா வித்தியாலயம்



*மீரா நகர் செய்தியாளர்*

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 2023ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அக்கரைப்பற்று அஸ்-ஸிறாஜ் மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) தேசிய ரீதியில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

27 பாடசாலை கிரிக்கெட் அணிகள் பங்குகொண்ட இச்சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி அனுராதபுரம் சிறைச்சாலை விளையாட்டுக்கழக மைதானத்தில் திங்கட்கிழமை (18) நடைபெற்றது. இதன் இறுதிப்போட்டியில் புத்தளம் ஆனந்த கல்லூரியை வீழ்த்தி அக்கரைப்பற்று அஸ்-ஸிறாஜ் அணி சம்பியனானது. இச்சுற்றுத்தொடரின் சிறப்பாட்டக்காரராக அஸ்-ஸிறாஜ் அணியின் பஹத் அஹமட் தெரிவு செய்யப்பட்டார்.

## 21ஆவது DSI சுப்பர் ஸ்போர்ட் பாடசாலைகளுக்கான கரப்பந்து சம்பியன்ஷிப் சனியன்று ஆரம்பம்




21ஆவது DSI சுப்பர் ஸ்போர்ட் பாடசாலைகளுக்கான கரப்பந்து சம்பியன்ஷிப் - 2023 போட்டிகள் இந்த வார இறுதியில் நடைபெறவுள்ளன. இலங்கை கரப்பந்து சம்மேளனத்தின் ஆதரவுடனும் மற்றும் கல்வி அமைச்சின் பாடசாலை கரப்பந்து சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த வருடாந்த நிகழ்வு, செப்டெம்பர் 23 மற்றும் 24ஆம் திகதிகளில், கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

11 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள், 13 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள், 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள், 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் மற்றும் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் உட்பட பல்வேறு வயது பிரிவுகளில் போட்டிகள் நடைபெறவுள்ளன. இம்முறையும் DSI நிறுவனம் போட்டிகளுக்கு அனுசரணை வழங்குகிறது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

### இன்னும் 3 நாட்கள்




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7